Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல்,மூக்குக் கண்ணாடியகம்

பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி வழங்குதல்
[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]
இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 7898

மலர்: 03. திருவள்ளுவர் ஆண்டு : 2035 கார்த்திகை 06 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 08 (21.11.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:51

### மீசாலையில் இளைஞன் மீது படையினர் சூடு


# ஆத்திரம் கொண்ட பொதுமக்களால் புத்தூர்ச் சந்தி படைமுகாம் அழிப்பு!

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் நேற்றுமுன்தினம் மாலை இரண்டு இளைஞர்கள் படு கொலை செய்யப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து நேற்று நடத்தப்பட்ட ஹர்த்தா லால் யாழ்.குடாநாடு முற்றாக செயலிழந்ததுடன் பிராதான வீதிகளினூடான வாக னப் போக்குவரத்துக்களும் தடுத்து நிறுத்தப்பட்டன.

அத்துடன் வீதிமறியலில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் மீசாலையில் சுடப்பட்டதை அடுத்து நேற்றுமாலை ஆத்திரம் கொண்ட பொதுமக்களால் மீசாலை – புத்தூர் சந்தி இராணுவ முகாம் தீயிட்டு அழிக்கப்பட்ட துடன் அங்கிருந்த படையினரும் விரட்டி அடிக்கப்பட்டனர்.

இளைஞர்கள் படுகொலையைக் கண்டித்து குடாநாடு தழுவிய ஹர்த்தால் வீதி மறியல் போராட்டங்கள் நேற்று நடைபெற்றன. இதன் போது மீசாலையில் மறியலில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இளைஞர் ஒருவர் காய மடைந்ததையடுத்து அந்தப் பகுதியில் பெரும்பதற்றம் நிலவியது. (12 ஆம் பக்கம் பார்க்க)



## நேற்றைய ஹர்த்தாலால் குடாநாடே ஸ்தம்பிதம்!

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் இருவர் கொடூரமான முறை யில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ்.குடாநாட்டில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட் டது.

பிரதான வீதிகள் மற்றும் பொது இடங் களில் வீதித்தடைகள் போடப்பட்டதுடன் வீதிக்குக் குறுக்கே ரயர்கள் போட்டு எரிக்கப் பட்டன. சில இடங்களில் இராணுவத்தின ருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறு கல்நிலை ஏற்பட்டதுடன் இதனால் பதற்ற மான சூழ்நிலை காணப்பட்டது.

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பிரதே சங்களுக்குமான தனியார் மற்றும் அரச பஸ் சேவைகள் இடம்பெறவில்லை. இதனால் அரச திணைக்களங்கள், தனியார் நிறுவ னங்களுக்குச் செல்லும் பயணிகள் வீதி (12 ஆம் பக்கம் பார்க்க)

### மைதானத்தில் விளையாடிய இளைஞர்களை

## படையினரின் உதவியுடன் ஈ.பி.டி.பியினரே சுட்டனர்!

### வல்வை மக்கள் ஒன்றியம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் நேற்றுமுன்தினம் மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இரண்டு இளைஞர்களும் படையினரின் உதவியுடன் ஈ.பி.டி.பியினராலேயே சுடப்பட்டு கொலை செய்யப்பட்டதாக வல்வை மக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வல்வை மக்கள் ஒன்றியம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் - மாவீரர்நாளை அனுஷ்டிக்கவும் தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்ததினத்தைச் சிறப்பாகக் கொண்டாடவும் ஏற்பாடுகள் செய்துவருகின்றபோதே இவ்வாறான திட்டமிடப்பட்ட தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு ஈ.பி.டி.பியினரே முழுப் பொறுப்புமுடையவர்கள். தெய்வேந்திரம் என்பவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்களுக்கு அரு (12 ஆம் பக்கம் பார்க்க)

## சடலங்கள் நேற்று ஒப்படைப்பு

சிறப்பாகக் கொண்டாடவும் ஏற்பாடுகள் செய்துவருகின்றபோதே இவ்வாறான திட்டமிடப்பட்ட தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு ஈ.பி.டி.பியினரே முழுப் பொறுப்புமுடையவர்கள். தெய்வேந்திரம் என்பவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்களுக்கு அரு (12 ஆம் பக்கம் பார்க்க)

# சடலங்கள் நேற்று ஒப்படைப்பு வல்வெட்டித்துறையில் பதற்றம்!



(வடமராட்சி)

வல்வெட்டித்துறையில் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொல்லப்பட்ட இரண்டு இளைஞர்களின தும் சடலங்கள் நேற்று மதியம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

கொல்லப்பட்ட இரண்டு இளைஞர்களின் சடலங்களை பருத்தித்துறை மாவட்ட நீதிவான் அரியநாயகம் நேற்றுக் காலை வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் பார்வையிட்டார்.

பின்னர் சம்பவம் நடைபெற்ற இடத்தையும் பார்வையிட்ட நீதிவான் பிரேதப் பரிசோதனை யின் பின்னர் சடலங்களை உறவினரிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

நண்பகலளவில் சடலங்கள் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்ட அதேசமயம் நேற்று வல்வெட்டித்துறைப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. வீதிகளில் கறுப்புக் கொடிகள், வாழைகள் கட்டப்பட்டிருந்ததுடன் - வீதிகளில் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

அத்துடன் பெருமளவான இளைஞர்கள் ஆவேசமாகக் காணப்பட்டனர். வல்வெட்டித் துறைப் பகுதியில் பெருமளவு படையினரும், கலகம் அடக்கும் பொலிஸாரும் குவிக்கப் பட்டிருந்தனர்.

உயிரிழந்த இளைஞர்களின் இறுதிச் சடங்கு இன்று காலை நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது. (14)

**மாவீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்கு சக்தியாக அமைந்துவிட்டது.** வே.பிரபாகரன் - தமிழீழ தேசியத் தலைவர்.

# காயமுற்ற நபர் இராணுவச் சீருடையுடன் வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது காய மடைந்து வல்வெட்டித்துறை மாவட்ட வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொன்னுத்துரை தெய்வேந்திரம் என்பவர் இராணுவ சீருடை அணிவிக்கப்பட்டு படை யினரால் கூட்டிச்செல்லப்பட்டார்.

குறிப்பிட்ட நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு வைத்தியசாலைக்குச் சென்ற 524 ஆவது படைப்பிரிவின் அதிகாரிகள் இருவர் பொன்னுத்துரை தெய்வேந்திரத்திற்கு இராணுவச் சீருடையினை அணிவித்து தமது பிக்கப்வாகனத்தில் அழைத்துச் சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக வல்வெட்டித் துறை மாவட்ட வைத்தியஅதிகாரியைத் தொடர்புகொண்டு கேட்டபோது பொன்னுத் துரை தெய்வேந்திரம் யார் மூலம் வைத்திய (12 ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரர் எழுச்சிவாரம் இன்று ஆரம்பமாகிறது!

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகள் தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் இன்று ஆரம்பமாகின்றது. இந்த நிகழ்வையொட்டி அனைத்துப் பிர தேசங்களிலும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவீரர் வார நிகழ்வுகள் இன்று காலை கோப்பாய், வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப் பாணம், தீவகம் ஆகிய மாவீரர் துயிலும் இல்லங்களில் ஆரம்பமாகும்.

அரச திணைக்களங்கள், தனியார் நிறு வனங்கள், பாடசாலைகள், கூட்டுறவுச் சங் கங்கள், வர்த்தக நிலையங்கள், உள்ளூ ராட்சி மன்றங்கள் ஆகியவற்றில் மாவீரர் (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

## வல்வை, மீசாலை பகுதிகளில்

# பொதுமக்கள் மீதான தாக்குதல்களுக்கு பொது அமைப்புக்கள் கண்டனம் தெரிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இரு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் மீசாலையில் வீதி மறியற்போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொதுமக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் என்பவற்றை குடாநாட்டு பொது அமைப்புக்கள் பலவும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

தாயக விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த மாவீரர்களின் நினைவு நாள், தேசியத்தலைவரின் பிறந்தநாள் நிகழ்வுகளைக் குழப்பும் வகையில் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொது அமைப்புக்கள் குற்றஞ் சாட்டியுள்ளன. நேற்று முன்தினமும், நேற்றும் இடம்பெற்ற இந்தச் சம்பவங்கள் குறித்து யாழ்.குடாநாட்டின் பொது அமைப் புக்கள் அனுப்பிவைத்த கண்டன அறிக்கைகள் வருமாறு :

### வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம்

தமிழ் மக்களின் தம் விடுதலை விடிவுக்காக தமது இன்னுயிரை ஆகுதியாக்கிய மாவீரர்களின் மகத்தான திருநாளைக் கொண்டாடும் முன்னெடுப்புக்களில் மனக்குளிர்ச்சியோடும், ஆழமான நேசிப்போடும் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் நடைபெற்றிருக்கும் இந்தக் கோரக்கொலை நடவடிக்கை மக்களின் மனங்களை ஆழப்புண் படுத்திவிட்டது.

அமைதியை நாடித் தொழிற்படும் கடின உழைப்புக்களையும், பயனற்றுப் போகும் மன எத்தனிப்புக்களுடன் இந்த மாதிரியான பேடித்தனங்களை சம்பந்தப்பட்ட தரப்பார் செய்து முடிக்கின்றார்கள். உண்மையில் இப்படியான கொலை நடவடிக்கைகள் இந்த மண்ணில் பாரதூரமான விளைவுகளையும், மோசமான நிலைமைகளையும் ஏற்படுத்தும்.

இந்தக் கொலைகளின் பின்னணியில் உள்ளவர்களுக்கு இந்த மாதிரியான நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்களின் எழுச்சியைத் தடுத்துவிட முடியாது.

இருப்பினும் அப்பாவி இளைஞர்கள் இருவர் மீதும் நடத்திய மனித நாகரிகமற்ற அநாகரிகத்தின் உச்சமான இந்தக் கொலைகளை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம்

வல்வெட்டித்துறைச் சம்பவமும், மீசாலைச் சம்பவமும் திட்டமிட்ட இராணுவப் பின்னணியின் ஒரு வெளிப்பாடு என்பது தெளிவாகத் தெரிகிறது. இராணுவம் இவ்வாறான படுகொலைகளைப் புரிந்து சமாதான முயற்சிகளைக் குழப்பி நாட்டில் மீண்டும் இரத்தக் களரியை ஏற்படுத்தி தமிழ்மக்களை அடிமைகளாக அடக்கி ஒடுக்கித் தொடர்ந்தும் வைத்திருக்க விரும்புகிறது.

இராணுவத்தின் இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கைகள் சமாதானத்தை எதிர்பார்த்து நிற்கும் எமது மக்களின் மனத்தில் ஏக்கத்தையும், கொதிப்பையும் ஏற்படுத்தி உள்ளதுடன், இப்படியான நடவடிக்கைகளை மக்கள் தொடர்ந்தும் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதை நேற்றைய போக்குவரத்துத் தடைகளும், மறியல்களும் எடுத்துக்காட்டுகின்றன.

சமாதானத்தையும் அமைதியையும் விரும்பும் எம்மக்கள் மீது இராணுவம் அடாவடித்தனத்தை மீண்டும் திணிக்க முற்பட்டால் அதன் விளைவு பாரதூரமாக அமையும் என்பதை அந்த மக்களின் சார்பாக தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

### தமிழ் மாணவர் ஒன்றியம்

ஒன்றும் அறியாத அப்பாவி இளைஞர்களைச் சுட்டுக்கொன்றவர்கள் யார்? யாழ்ப்பாணத்தையும் மட்டக்களப்பாக மாற்ற நினைக்கும் பேரினவாத சக்திகளின் நாடகம் நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் அரங்கேறியிருக்கின்றது.

சர்வதேசத்துக்கு ஊடாக யுத்த நிறுத்தத்தைப் பெற்றுக்கொண்ட பேரினவாதம், யுத்த நிறுத்தம் என்றால் என்னவென்று தெரியாத பேரினவாதம் வெறியாட்டம் ஆடியுள்ளது. தமிழினத்தைப் பல்வேறு கூறாக்கி விடுதலைப் புலிகளையும், மக்களையும் பிரித்து விடுதலை உணர்வுள்ளவர்களை அழிக்கும் வேலையை யுத்த காலத்தைப் போல் யுத்த நிறுத்த காலத்திலும் செய்ய நினைக்கும் அரச பட்டாளத்தை எச்சரிக்கிறோம்.

விடுதலைத் துரோகிகளை முகாம்களுக்குள் வைத்துத் தீனி போட்டு இப்படியான பலியெடுப்பு வேலைகளைச் செய்யும் பேரினவாதிகளின் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தங்களையே கொண்டு வழிப்படுத்த முடியாத, தங்கள் உயிர்களையே பாதுகாத்துக்கொள்ள முடியாத தேசத்துரோகிகள் இராணுவ முகாம்களுக்குள் இருந்துகொண்டு செய்கின்ற அட்டகாசங்களை இனியும் பொறுக்க முடியாது.

சர்வதேச வார்த்தைகளை மதித்துச் சரியான மரபிற்கேற்ற யுத்த நிறுத்தத்தைப் பேணிவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டைச் சர்வதேசம் இன்று சரியாகப் புரிந்துள்ளது. அவர்களின் இந்தப் பேணுகையின் உயரிய தன்மைக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் நடைபெறும் இவ்வாறான அரக்கத்தனங்களை உலகுக்கு ஒட்டுமொத்தமாக வெளிக்காட்ட எல்லோரும் இன்றே தயாராகுவோம்.

### மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம்

வல்வெட்டித்துறை சிதம்பர கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் கோழைத்தனமான மிருகச்செயல்.

இந்த இளைஞர்களின் இழப்புக்கு ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் துப்பாக்கிக் கலாசாரம் விரிவடைந்து வருவதானது மனக்கிலேசத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. ஒழுங்கையும், சட்டத்தையும் பேணிக்காக்கும் மக்கள் ஒன்றிணைந்து இதுபோன்ற கொடூரமான செயல்களைத் தவிர்ப்பதற்கு சட்டத்தை பாதுகாப்பவர்களுக்கு வலியுறுத்தவேண்டும்.

நீதிபதிகளே துப்பாக்கிக் கலாசாரத்துக்கு விதிவிலக்கற்றவர்களாக இருக்கிறார்கள். சட்டஒழுங்குகளை நிறைவாக நடைமுறைப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தான பிறகு போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு இயல்பு வாழ்க்கையை மீளக்கொண்டு வருவதற்கும், உள்நாட்டுப் போரினால் வன்முறை வேக அதிகரிப்பைத் தடைசெய்வதற்கும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எனவே - யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் உங்களிடம் வினயமாகவேண்டிக் கொள்வது, உங்கள் ஆணையை வலுப்படுத்தி ஐ.நா மனிதஉரிமை சாசனத்தை உட்புகுத்திச் சமாதானப் பேச்சினை விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அந்த அறிக்கையில் தெவிக்கப்பட்டுள்ளது.

### காரைநகர் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை

தற்பொழுது நிலவிவரும் சமாதானச் சூழலில் இயல்பு வாழ்க்கை நோக்கித் திரும்பும் அதேவேளை- நேற்று முன்தினம் மாலை வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் இடம்பெற்ற மிலேச்சத்தனமான, அப்பாவி இரு இளைஞர்களின் விலை மதிப்பிடமுடியாத உயிர் இனந்தெரியாதோரால் கொல்லப்பட்ட சம்பவத்தினை வன் மையாகக் கண்டிப்பதுடன், இது தொடர்பானவர்களை உடன் சடடத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்க வேண்டும் என வன்மையாக வலியுறுத்துகின்றோம்.

இந்தச் செயலின் மூலம் நாட்டில் ஜனநாயகம் மீறப்பட்டு மீண்டும் மக்கள் மத்தியில் விரக்தி ஏற்பட்டு இளைஞர்கள் மத்தியில் ஆயுதம் ஏந்திப்போராடித்தான் ஆக வேண்டும் என்கிற உத்வேகத்தினை இந்தச் சம்பவம் ஏற்படுத்திவிடும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை.

எனவே - இத்தகைய விடயம் இனியொருபோதும் இடம்பெறாமல், பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமென சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு வேண்டுகோள் விடுப்பதுடன் இது தொடர்பாக உடன் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கொல்லப்பட்ட இரு இளைஞர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

காரைநகர் பிரதேச பொதுமக்கள் சார்பிலும், தேசிய எழுச்சிப் பேரவை சார்பிலும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், இந்தக் கொலைச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வடமாகாண அதிபர்கள் சங்கம்

வல்வெட்டித்துறையில் சிதம்பரக் கல்லூரிக்கு முன்பாக விளையாடிக்கொண்டிருந்தவேளையில் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் இரு இளைஞர்கள் கொடூரமாகச் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தினை வடமாகாண அதிபர்கள் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. தற்போதய சமாதான சூழலையும் தமிழ் மக்களையும் குழப்பிவிடக் கூடிய இவ்வாறான சம்பவங்கள் மிகவும் ஆபத்தானவை. பொறுப்பற்ற இவ்வாறான சம்பவங்கள் இனிவரும் காலங்களில் நிகழாதிருப்பதனை உரியவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

### கல்வி மேம்பாட்டுப் பேரவை

வல்வை சிதம்பரக் கல்லூரி மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து இரு பிள்ளைகளின் உயிரைக் குடித்தவர்கள் நீதிக்குமுன்னால் நிறுத்தப்பட வேண்டியவர்கள்.

நாளை மாவீரர் எழுச்சி வாரம் தொடங்கவுள்ளது. இந்தநேரத்தில் இத்தகைய செயற்பாடு மக்களைத் திசை திருப்பவும், அச்சப்பட வைக்கவும் மேற்கொள்ளப்பட்டது போலுள்ளது. பாடசாலை மைதானத்தில் இத்தகைய பயங்கரச் செயல் மேற்கொள்ளப்பட்டதைக் கல்வி மேம்பாட்டுப் பேரவை மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

அப்பாவிகள் இவ்வாறு கொலை செய்யப்படுவதை நிறுத்து வதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யார் என்பதைக் கண்டுபிடித்து இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நடைபெறா வண்ணம் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சமாதானம் வரும் என எதிர்பார்க்கும் மக்கள் மனத்திலே அச்சத்தை ஏற்படுத்தும் அதேவேளை - அவர்கள் மனம் கொதிப்படையும் நிலையையும் ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய கொடூரமான செயலைக் கண்டிப்பதுடன், இத்தகைய நிகழ்வு இனிமேல் நடைபெறாதிருக்க எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழர் ஆசிரியர் சங்கம்

தமிழர் தாயகப் பிரதேசத்தில் நிரந்தர சமாதானம் வரவேண்டுமென சகல தரப்பினரும் விரும்பும் இந்தவேளையில் - இத்தகைய ஈனச்செயல்கள் சமாதானம் ஏற்பட்டுவிடக்கூடாது எனத்திட்டமிட்டுச் செய்யப்படும் துரோகக் கும்பல்களின் சதிச்செயலாகும்.

இராணுவ அரணுக்கும், பொலிஸ் அலுவலகத்துக்கும் அண்மையில் நடைபெற்ற இந்தச்செயல் எல்லோர் மனத்துக்கும் ஓர் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான சம்பவங்களால் பொதுமக்களின் எதிர்காலப் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. எம் இனத்தின் விடுதலைக்காக தம் இன்னுயிரை ஆகுதியாக்கிய மாவீரர்களின் நினைவாக மாவீரர் வாரம் ஆரம்பமாகியுள்ளது. இந்தத் துயரச் சம்பவம் மாவீரர்களின் தியாகத்தை ஏளனம் செய்வது போல் அமைந்துள்ளது.

இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருக்க பாதுகாப்போடு சம்பந்தப்பட்டவர்களைக் கோருவதைவிடுத்து நமக்கு நாமே பாதுகாப்பை ஏற்படுத்த, எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பது சிறந்தது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சுரேஷ் பிரேமச்சந்திரன் - எம்.பி

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியில் விளையாடிக் கொண்டிருந்த இரு அப்பாவி இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமை மிகவும் வேதனைக்குரியதும், கண்டிக்கத்தக்கதுமாகும். மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியில் பட்டப் பகலில் இவ்வாறான காடைத்தனம் அரங்கேறியிருக்கிறது. இதன் பினனால் திட்டமிட்ட மோசடித்தனமான வியூகங்கள் வகுக்கப்படுகின்றது என்பதே அர்த்தமாகும்.

மீண்டும் யுத்தத்தை நோக்கி எம்மைத் தள்ள முயற்சிக்கும் எந்த சக்திக்கும் நாங்கள் பலிக்கடாக்கள் ஆகிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும். எமது மண்ணில் இருந்து மிச்சம் சொச்சமாக உள்ள மக்களையும் விரட்டி விட்டால் தமது காரியம் சுலபமாக முடிந்துவிடும் என யாராவது சிந்திக்கக் கூடும். எனவே இவற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக யுத்த முயற்சிகளை முளையில் கிள்ளி எறியக் கூடிய வகையில் நாங்கள் ஒன்றுபட்டுச் செயற்படுதல் வேண்டும்.

அப்பாவி இளைஞர்களின் அநியாயக் கொலைக்கு எமது ஆழ்ந்த இரங்லையும் அஞ்சலியையும் தெரிவிப்பதுடன் அவர்களது பெற்றோருடன் எமது கவலையையும் பகிர்ந்து கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான

அஜித் இருவேடங்களில், பூஜா நடித்த



அட்டகாசம்

பு.நே 10.30, 2.30, 6.30, 9.30

ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.

2 வது வெற்றிவாரம் (குளிரூட்டப்பட்டது)

தனுஷ், பிரியா நடித்த

(ரீல்ஸ்)

வெகுவிரைவில் : இரவு 9.00 (பு.நே) காட்சியாக

RAMBO - 3

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.00 (பு.நே) (சி-3319)

நாகம்ஸ் சுன்னாகம்

இந்தியாவிலும் - இலங்கையிலும் ஒரேதின வெளியீடான

R.B.சௌத்திரியின்

சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த

சத்ரபதி

(ரீல்ஸ்)



காட்சி நேரம்: 11.00, 2.00, 7.00, 10.00 (பு.நே)

நிரஞ்சனாஸ் சங்கானை

அஜித், சிநேகா நடித்த

ஜனா

(ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

RAMBO - 3 (சி-2723)



## Experienced English Teachers Wanted

**Kilinochchi**

**The English Language College in Kilinochchi seeks experienced English teachers to.**

- train local teachers (in school curriculum, grades 3 - 11)
- teach advanced english.

**Requirements :**

- Minimum 5 years experience in teaching English to children and adults.
- Excellent spoken and Written English

**please send details of qualifications and experience to:**

**The Principal,**
**English Language College,**
**Tamils Rehabilitation Organisation,**
**Jaffna Road, Kilinochchi.**


**Applications close - 29.11.2004**

**The English Language College is an initiative of the Tamils Rehabilitation Organisation.**

(C/2880)

# இவர்கள் பார்வையில் வரவு - செலவுத் திட்டம்

நாடாளுமன்றத்தில் அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு - செலவுத் திட்டம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை




என்று, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் - 2005 ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டம் பணவீக்கத்தைப் பாரியளவில் அதிகரிக்கப்போகின்றது.

அரசாங்க ஊழியர்களின் வேலை நேரத்தை ஒரு மணித்தியாலத்தால், அதிகரித்துள்ளமை, சர்வதேச தொழிற்சட்டத்தை மீறும் செயலாகும் என ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

---



அரசாங்கத்தின் வரவு - செலவுத்திட்டம் வாழ்க்கைச் செலவுப் புள்ளியை வானளவுக்கு உயர்த்தப்போகின்றது என்று, நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு - செலவுதிட்டம் குறுகிய நோக்கங்களைக் கொண்ட அரசியல் மயப்படுத்தப்பட்ட ஒன்றாகும். இது எதிர்பார்க்கப்படும் சர்வஜன வாக்கெடுப்பு, அரசியலமைப்பு மாற்றம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டமாகும் என ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

---

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் உடனடியாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காவிட்டால், மீண்டும் யுத்தம் ஏற்படும் அபாயம் உள்ளது என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.



நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் -

இவ்வாறு யுத்தம் ஏற்பட்டால், தனிநாடு உருவாவதைத் தடுக்க முடியாது. ஜனாதிபதிக்கு உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது.

எனினும், அதனை நழுவவிட்ட நிலையில் யுத்தம் ஏற்படுமானால், தற்சமயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த முடியாமற் போய்விடும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது எழுந்த ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் - நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், நாட்டின் பிரிவினைக்கு எதிராக சத்தியப் பிரமாணம் செய்துவிட்டு, தற்சமயம் பிரிவினையைப் பற்றிப் பேசுவது ஏற்புடையதல்ல என அவர் தெரிவித்தார். (11)

---

இந்த வரவு - செலவுத்திட்டத்தில் பாது காப்புக்கு 7,600 கோடி ரூபா ஒதுக்கப்பட் டிருப்பது தமிழ்மக்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்த வருடம் ஆட்சியிலிருந்து ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தனது வரவு - செலவுத்திட்ட யோசனையில் சமாதான முயற்சிகளுக்கு முன்னுரிமை அளித்திருந் தது.



ஆனால், இந்த அரசின் முதலாவது வரவு-செலவுத்திட்டம் சில நன்மைகளைக் கொண்டிருந்தாலும், சமாதான முயற்சிகளைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

யுத்தம் நிறுத்தப்பட்டு, அமைதி நிலவிவருகின்ற சூழலில் இவ்வளவு கூடுதலான தொகையைப் பாதுகாப்புக்கு ஒதுக்கியிருப்பது நியாய மற்றது எனத் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஏ.பாயிஸ் இது தொடப்பாகக் கூறுகையில் -

தேர்தலை மையமாக வைத்து, இந்த வரவு - செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது போல் தெரிகிறது. இதில் மக்கள் நலனை விட, அரசியல் நலனே முன்னிற்கிறது எனத் தெரிவித்தார்.

---



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம், சமர்ப்பித்துள்ள வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து, வாக்களிக்கப்போவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தேர்தலைக் குறிவைத்து தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த வரவு - செலவுத்திட்டம் நாட்டில் மிகப்பெரிய பணவீக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அபாயம் உள்ளது. அத்துடன், தென்மாகாணத்தை மட்டும் கருத்திற்கொண்டு இது தயாரிக் கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைக் கருத்தில் கொள்ளாத இந்த வரவு - செலவுத் திட்டத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் குறித்துப் பேசப் படாததும் கண்டனத்துக்குரியதென அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் 'றோ' உளவாளிகள் ஊடுருவல்!

## இணையத்தளம் கூறுகிறது

இந்திய உளவுப் பிரிவான 'றோ' அமைப்பின் உளவாளிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் - வர்த்தகர்கள், ஊடகவியலாளர்கள் என்ற போர்வையில் ஊடுருவி, உளவுத் தகவல்களைத் திரட்டிவருவதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

அரசசார்பற்ற நிறுவனங்கள் இந்தச் செயலுக்கு துணைபோவதாகத் தெரியவந்துள்ளது.

'றோ'வினால் வழங்கப்படும் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக்கொண்டு, தென்னிலங்கையிலிருந்து இயங்கும் இவர்கள், சமாதானக் குழுக்களை அழைத்துச் செல்வதாகக் கூறிக் கொண்டு 'றோ'வின் உளவாளிகளையும் இணைத்துக்கொண்டு வருவதாகவும் தெரியவருகிறது

றோவின் உளவாளிகளாகக் கிளிநொச்சி வருபவர்களில் - தமிழர்களும், சிங்களவர்களும் அடங்குவதாகவும், இவர்களுக்குப் பணஉதவி தாராளமாக வழங்கப்படுவதாகவும் கூறும் இந்த இணையத்தளம், அண்மையில் இந்தியத் தூதுவர் வழங்கிய இரவு விருந்துபசாரத்திலும் இநத உளவாளிகள் கலந்து கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளது.

## டக்ளஸ் மீதான தாக்குதல்

# உதவிய பெண் மீதான விளக்க மறியல் நீடிப்பு!

ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது கடந்த ஜூலை மாதம் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலின்போது, குண்டுதாரிக்கு உதவினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்ணின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப் பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி அலுவலகத்தில் முன்னர் பணிபுரிந்தார் எனக் கூறப்படும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சத்தியலீலா சிவகுமார் என்ற பிரஸ்தாப யுவதியின் வழக்கு - கடந்த புதன்கிழமை கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் மஜிஸ்ரேட் எஸ்.சரத் கருணாரட்ண முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது சந்தேக நபரை பாதுகாப்புக் காரணங்களால் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யமுடியவில்லை என்றும், சிறைச்சாலை நீதிமன்றில் அவர் ஆஜர் செய்யப்படுவார் என்றும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

விளக்கத்தைக் கேட்க மஜிஸ்ரேட் சந்தேகநபரை - எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## காலத்தை வெல்லும் தலைவர் அவுஸ்ரேலியாவில் நூல் வெளியீடு

தமிழீழ தேசியத் தலைவரின் ஆளுமையைச் சித்தரிக்கும் 'காலததை வெல்லும் தலைவர்' நூல் வெளியீட்டு விழா அவுஸ்ரேலியாவில் நடைபெற்றது.

அவுஸ்ரேலியா மெல்பேர்ன் நகரில் காலத்தை வெல்லும் தலைவர் நூல் வெளியிடப்பட்டது. தென்துருவ தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்பட்ட இந்த நூலில் தமிழீழத் தேசியத் தலைவரின் மிக அரிதான ஒளிப்படங்களையும், அவருடைய சிந்தனையையும், அவர் குறித்த முக்கிய பிரமுகர்கள் தெரிவித்த கருத்துக்களையும் இந்த நூல் உள்ளடக்கியது. சுமார் 3000 ஒளிப்படங்களில் இருந்து 200 ஒளிப்படங்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவற்றில் சிறப்பான 74 ஒளிப்படங்கள் தெரிவு செய்யப்பட்டு இவை இந்தநூலை அலங்கரிக்கின்றன.

மெல்பேர்னில் நடைபெற்ற நூல் வெளியீட்டில் அவுஸ்ரேலியாவின் சகல மாநிலங்களிலிருந்தும் தமிழ்சங்கப் பிரதிநிதிகளும், முக்கிய பிரமுகர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

## படையினர் புலிகள் சந்திப்பு இறுதிநேரத்தில் ரத்து!

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கும், இராணுவ உயர்அதிகாரிகளுக்கும் இடையில் வவுணதீவு யுத்த சூனியப் பிரதேசத்தில் நேற்று நடைபெறவிருந்த இந்தமாதத்துக்கான புரிந்துணர்வுச் சந்திப்பு, இறுதி நேரத்தில் ரத்துச்செய்யப்பட்டது.

இரு தரப்பினரினதும் வேண்டுகோள் மற்றும் சீரற்ற காலநிலை காரணமாகவே இந்தச் சந்திப்பு ரத்துச்செய்யப்பட்டதாகப் போர் நிறுத்த கண்காணிப்புக்குழு நேற்று முன்தினம் அறிவித்தது.

இரு தரப்பினருடனும் தொடர்பு கொண்ட பின்னரே சந்திப்புக்கான திகதி தீர்மானிக்கப்படுமென்றும் கண காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

## லஞ்சம் பெற்ற கப்டன் 50 லட்சம் ரூபா பிணையில்!

லஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில், கைதுசெய்யப்பட்டிருந்த இராணுவக் கப்டன் ஒருவரை 50 லட்சம் உறுதிப்பிணையிலும், 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் செல்வதற்கு கொழும்பு மஜிஸ்திரேட் நீதிவான் அனுமதியளித்துள்ளார்.

இந்தச் சந்தேகநபர் வெளிநாடு செல்வதற்கும் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

49 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் எவ்வாறு கிடைக்கப் பெற்றது என்பதற்கான தகவல்களை வழங்க மறுத்ததற்காக, இந்தச் சந்தேகநபரை லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு கைதுசெய்தமை குறிப்பிடத்தக்கது.

# சமாதானப் பேச்சுக் குறித்து அபிப்பிராய பேதம் உள்ளது!

## ஏற்றுக்கொள்கிறார் ஜனாதிபதி சந்திரிகா



(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களை தொடங்குவதற்கு விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும் என்று பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

பேச்சு வார்த்தைக்கு வாருங்கள் இடைக்கால நிர்வாகசபை குறித்து, நாங்கள் பேசத் தயார் என்று விடுதலைப்புலிகளிடம் சொல்லி அவர்களைக் கூப்பிடுகிறோம்.

இடைக்கால நிர்வாகம் குறித்த புலிகளின் பிரேரணைகள் குறித்தும் நாங்கள் பேசத்தயார். ஆனால், அது குறித்து எங்களுக்கு சில அபிப்பிராயம் இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். அது உண்மை தான். எமக்குள் அபிப்பிராயபேதம் இருக்கத்தான் செய்கிறது. வாருங்கள் அதுபற்றி உட்கார்ந்து இருந்து பேசலாம். விவாதிக்கலாம் என்று அவர்களை அழைக்கிறோம்.

ஜே.வி.பி.சமாதானப் பேச்சுவார்த்தைகளில் சொல்வது இது தான். அது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. விடுதலைப்புலிகளின் பிரேரணையில் சமர்ப்பிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் மட்டும் பேசுவதற்குத் தயாரில்லை என்று தான் ஜே.வி.பி சொல்கிறது.

ஏனென்றால், விடுதலைப் புலிகளின் பிரேரணைகளில் மூன்று பிரிவுகள் இருக்கின்றன. அவை இலங்கை என்ற இந்த நாட்டினுடைய இறைமைக்குப் பெரிய பாதிப்பைக் கொண்டுவரக் கூடியவை. இடைக்கால நிர்வாகம் குறித்த பிரேரணைகள் அப்படி இருக்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## புதைத்துவைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் திருமலையில் மீட்பு!

(திருகோணமலை)

திருகோணமலை - மூதூர் தர்ஹா நகர் கிராமத்தில் புதைக்கப்பட்ட நிலையில் இருந்த ஒரு தொகுதி ஆயுதங்களைப் பொலிஸார் கண்டெடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.


ரி - 56 ரக துப்பாக்கி - 01
எஸ்.எல்.ஆர்.ரகதுப்பாக்கி - 01
எஸ்.எம்.ஜி.ரக துப்பாக்கி - 01
கைக்குண்டுகள் - 08
துப்பாக்கி ரவைகள் - 400 மற்றும் மகசீன்களும் கைப்பற்றப்பட்டதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மூதூர் ஆற்றோரமாக புதைக்கப்பட்டிருந்த இந்த ஆயுதங்களை கடந்த வியாழக்கிழமை பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே கண்டுபிடித்து மீட்கப்பட்டதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# வல்லை இளைஞர்கள் படுகொலையும்... விளைவுகளும்...!




மரண விசாரணை நடத்தும் நீதிவான்!




பொலிஸாருக்கு விளக்கும் வைத்திய அதிகாரி!



வைத்தியசாலைக்குள் கடும் பாதுகாப்பு!



வீதியை மறித்து ரயர்கள் எரிப்பு!



வெறிச்சோடிக்கிடக்கும் பஸ் தரிப்பு நிலையம்!



வல்லை வைத்தியசாலை முன் கவச வாகனம்!



போக்குவரத்தை தடைசெய்யும் பொதுமக்கள்!



வெறிச்சோடிய சுன்னாகம் நகர்!



கவச வாகனம் முன் மறியலில் பொதுமக்கள்!

### நியூஸிலாந்துடனான டெஸ்ட்

## முதல் இனிங்ஸில் அவுஸ்ரேலியா

## 564 ஓட்டங்கள் குவித்தது!



அவுஸ்ரேலியா - நியூஸிலாந்து அணிகள் இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்று வருகிறது.

நியூஸிலாந்து முதல் இனிங்ஸில் 353 ஓட்டங்களைக் குவித்தது. ஜேக்கப் ஓரம் 126 ஓட்டங்களும், சின்கிளெயர் 69 ஓட்டங்களும் எடுத்தனர். கஸ்பரோவிச், வோன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பின்னர் முதல் இனிங்ஸை விளையாடிய அவுஸ்ரேலியா 2 ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 197 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மார்ட்டின் 59 ஓட்டங்களுடனும், கிளார்க் 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று 3 ஆம் நாள் ஆட்டம் நடைபெற்றது. இருவரும் தொடர்ந்து ஆடினார்கள். நன்றாக ஆடிக் கொண்டிருந்த மார்ட்டின் 70 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது எல்.பி. டபிள்யூ முறையில் அவுட்டானார். அவரது ஓட்டங்களில் 8 பவுண்டரிகளும், ஒரு சிக்ஸரும் அடங்கும். அடுத்து கில்கிறிஸ்ட் களமிறங்கினார்.

மறுமுனையில் இருந்த மைக்கல் கிளார்க் மிகவும் அபாரமாக விளையாடி சதம் அடித்தார். 148 பந்துகளைச் சந்தித்து அவர் 100 ஓட்டங்களைத் தொட்டார். கிளார்க்கின் 2 ஆவது டெஸ்ட் சதம் இதுவாகும். இந்தியாவுக்கு எதிராக பெங்களூரில் நடந்த முதல் டெஸ்டிலும் சதமடித்திருந்தார்.

மதிய உணவு இடைவேளையின்போது அவுஸ்ரேலியா 5 விக்கெட் இழப்புக்கு 320 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கிளார்க் 100 ஓட்டங்களுடனும், கில்கிறிஸ்ட் 39 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு கில்கிறிஸ்டும் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டார். அவர் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். இருவரது அபாரமான ஆட்டத்தால் அவுஸ்ரேலியாவின் ஓட்ட எண்ணிக்கை மளமள வென்று குவிந்தது.

நேற்றைய ஆட்டநேர முடிவில் அவுஸ்ரேலியா 9 விக்கெட் இழப்புக்கு 564 ஓட்டங்கள் குவித்திருந்தது. மெக்ரா 54 ஓட்டங்களுடனும், ஜிலெஸ்பி 44 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

கிளார்க் 200 பந்துகளில் 21 பவுண்டரிகள், ஒரு சிக்சருடன் 141 ஓட்டங்களும், கில கிறிஸ்ட் 151 பந்துகளில் 13 பவுண்டரிகள், 4 சிக்சர்களுடன் 125 ஓட்டங்களும் எடுத்தனர். கிளார்க்கும் - கில் கிறிஸ்டும் 6 ஆவது விக்கெட்டுக்கு இணைப்பாட்டமாக 216 ஓட்டங்கள் எடுத்தமை நேற்றைய ஆட்டத்தின் சிறப்பம்சமாகும். நியூஸிலாந்து தரப்பில் மார்ட்டின், விற்றோரி ஆகியோர் தலா 4 விக்கெட்டும், மில்ஸ் ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

## இந்தியாவுடனான முதல் டெஸ்ட்

## தென்னாபிரிக்கா நிதான ஆட்டம்



சிமித் தலைமையிலான தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.

இந்திய - தென்னாபிரிக்க அணிகள் இடையேயான 2 டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் டெஸ்ட் கான்பூரின் கிரீன்பார்க் மைதானத்தில் நேற்று காலை 10 மணிக்குத் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி கப்டன் சிமித் தனது அணி முதலில் துடுப்பாட்டம் செய்யும் என்று அறிவித்தார். தொடக்க ஆட்டக்காரர்களாக அவரும், அன்ட்ரூ ஹோாலும் களமிறங்கினார்கள்.

நேற்றைய போட்டிக்கான இந்திய அணியில் இருந்து கைவ் நீக்கப்பட்டார். கங்கூலி

விளையாட்டு

அணிக்குத் திரும்பியிருப்பதால் கைவ் பலிக்கடா ஆக்கப்பட்டார். அவுஸ்ரேலியத் தொடரில் அவரது ஆட்டம் பாராட்டும்படி இருந்தது. கங்கூலி காயம் காரணமாக அவுஸ்ரேலியாவுக்கு எதிரான கடைசி 2 டெஸ்டில் ஆடவில்லை.

அணியில் 3 சுழற்பந்து வீச்சாளர்கள் சேர்க்கப்பட்டனர். 3 சுழற்பந்து வீச்சாளர்களை வைத்துத்தான் இந்திய அணி அவுஸ்ரேலியாவுக்கு எதிரான மும்பை டெஸ்டில் வெற்றி பெற்றது. இதனால் ஹர்பஜன் சிங், கும்ளே, முரளி கார்த்திக் ஆகிய 3 சுழற்பந்து வீச்சாளர்கள் இடம்பெற்றனர்.

இரு அணி வீரர்கள் வருமாறு:

**இந்தியா**

கங்கூலி (கப்டன்), ஷேவாக், கௌதம் காம்பிர், ராவிட், லக்ஸ்மன், டெண்டுல்கர், தினேஷ் கார்த்திக், கும்ளே, ஹர்பஜன் சிங், முரளி கார்த்திக், சகீர்கான்.

**தென்னாபிரிக்கா**

சிமித் (கப்டன்), அன்ட்ரூ ஹோால், டிப்பென்னர், கலிஸ், மார்ட்டின் வான், புருயின், டிசோலிசிலே, பொலக், ரூடொல்ப், பீட்டர்சன், என்ரினி.

நேற்றைய ஆட்டத்தில் சுழற்பந்து வீச்சு எடுபட்டது. கும்ளே 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். சிமித் 36, ஜார்ஸ்வெல்ட் 2, கலிஸ் 37, ரூடொல்ப் 0 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

ஹோால் 99 ஓட்டங்களுடனும், டிப்பென்னர் 46 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நேற்றைய ஆட்டநேர முடிவில் தென்னாபிரிக்கா 4 விக்கெட் இழப்புக்கு 230 ஓட்டங்களை எடுத்திருந்தது.

# விவாத சுற்றுப்போட்டியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை - மாவீரர் நாளை முன்னிட்டு நடாத்திய விவாதச் சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டிக்கு தெரிவான யாழ் பல்கலைக்கழக அணிக்கும், யாழ். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அணிக்கும் இடையிலான விவாதச் சுற்றுப் போட்டியும், இந்தச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற அணிக்களுக்கான பரிசளிப்பும், பங்கு பற்றிய அனைத்து போட்டியாளர்களுக்குமான பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று இரவு 8 மணிக்கு மாணவர் பேரவைத் தலைவர் ப.பகீதரன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

அத்தோடு, தமிழீழத் தேசிய தலைவரின் 50 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து, தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வும், தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனைகள் அடங்கிய சிறிய கைந்நூல் ஒன்றும், மாவீரர் நாளையொட்டிய மாவீரர்களின் தியாகங்கள் பற்றிய கவிதை ஒலிநாடா ஒன்றும் வெளியிடப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸ், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# மாவீரர் நாள் ஏற்பாட்டுக்குழு விடுத்துள்ள வேண்டுகோள்

தமிழீழ மக்களே எமது இனத்தின் இருப்பையும், சுதந்திர வாழ்வையும் உறுதி செய்து விட்டு, எம்முயிர் காக்க, தம்முயிர் ஈந்த தமிழீழ மாவீரர்களின் எழுச்சிநாள்- எதிர்வரும் 27 ஆம் திகதி தமிழீழம் எங்கும் உணர்ச்சி பூர்வமாக அனுஷ்டிக்க ஏற்பாடாகியுள்ளது.

இந்தத் தினத்தில் தமிழ்மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் இந்த மண்மீதும், மக்கள் மீதும் பற்றுக் கொண்டு தங்களையே அர்ப்பணித்த மாவீரர்களுக்காக வீதிகள், அலுவலகங்கள், பாடசாலைகள், சந்திகள், வர்த்தக நிலையங்கள் சனசமூகநிலையங்கள் அனைத்தையும் துப்பரவு செய்து, சிவப்பு மஞ்சள் கொடிகளாலும், வளைவுகளாலும், அலங்காரப் பந்தல்களாலும் எமது தமிழீழப் பிரதேசங்களை அலங்கரித்து, எழுச்சிப் படுத்தி எமது மன உணர்வுகளையும், இந்த நாளின் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துவதோடு, 27 ஆம் திகதி மாலை 6 மணி 5 நிமிடத்துக்கு இந்து, கிறிஸ்தவ ஆலய மணிகளை ஒலி எழுப்பி, 6.06 இற்கு சுடர் ஏற்றி, 6.07 இற்கு அகவணக்கம் செய்து உணர்வுடனும், எழுச்சியுடனும் வெளிப்படுத்தி - மாவீரர் துயிலும் இல்லங்களில் இடம்பெறும் இறுதி நாள் நிகழ்வுகளிலும் ஒன்று கூடிச் சிறப்பிக்குமாறு மாவீரர் நாள் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

# தேசியத் தலைவருக்கு ஆசிவேண்டி வல்லிபுர கோயிலில் விசேட வழிபாடு

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் ஐம்பதாவது பிறந்தநாளை முன்னிட்டு, எதிர்வரும் 26 ஆம் திகதி வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தில், அவர் நீடுழி வாழ வேண்டி - விசேட அபிடேகமும், பூசையும் காலை 9.30 மணியளவில் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து ஆலய சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆசிரமத்தில் விசேட அன்னதானமும் வழங்கப்படவுள்ளது.

இதனை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான அறங்காவலர் சபையும், பெரியாழ்வார் ஆசிரம நிர்வாகசபையும் ஒழுங்கு செய்துள்ளன. (20)

# நாடு முழுவதும் சுமார் 2 ஆயிரம் கிராம அலுவலர் வெற்றிடங்கள்

(ஆழியவளை)

நாடு முழுவதும் சுமார் 2 ஆயிரம் கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்கள் இருப்பதாக, பொது நிர்வாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் நாடளாவிய ரீதியிலுள்ள இந்தக் கிராம சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு, விண்ணப்பித்து 3 வருடங்களுக்கு மேலாகியும் இன்னமும் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை குறித்து, கிராம அலுவலர் பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் விசனம் அடைந்துள்ளனர். (122)

## சாயிபாபாவின் 79 ஆவது அவதார தினவிழா

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 79 ஆவது அவதாரதின விழா நாளை மறுதினம் காலை 5.00மணிமுதல் யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயிசேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

விசேட நிகழ்வுகளாக நகர சங்கீர்த்தனம், கொடியேற்றம், வேத பாராயணம், வில்லிசை, நாடகம், சான்றிதழ் வழங்கல் என்பன இடம்பெறும். (111)

## நினைவு தூபியடியில் சிரமதானம்

மாவீரர் நாளை முன்னிட்டு - முதலாவது மாவீரர் லெப்டினன்ட் சங்கர் உட்பட, 7 பேரின் திருவுருவப் படங்கள் அடங்கிய தூபி - கம்பர்மலை பாரதி' இளைஞர்களால் சிரமதானம் மூலம் புனரமைக்கப்பட்டு வருகிறது.

கம்பர்மலைச்சந்தியில் அமைந்துள்ள இந்தத் தூபி - 1995 ஆம் ஆண்டு இராணுவத்தால் சிதைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (116)

# சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை புனரமைப்பு

போர் நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்ட சாவகச்சேரி மாவட்ட அரசினர் வைத்தியசாலை சுமார் 4 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதாக வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபையினர் தெரிவித்தனர்.

இந்த திட்டத்தின்கீழ் இந்த வைத்தியசாலையில் ஆண் நோயாளர்கள் தங்கும் விடுதி, பெண் நோயாளர்கள் தங்கும் விடுதி மற்றும் நிர்வாக அலுவலகங்கள் என்பன அமைக்கப்படவுள்ளன.

மேற்படி வைத்திய சாலையில் காணப்படும் தாதியர் பற்றாக்குறை வைத்தியர் பற்றாக்குறை என்பனவும் நிவர்த்திசெய்யப்படவுள்ளது.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தலைமையில் வைத்திய சாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளரைச் சந்தித்து இந்த வைத்தியசாலையின் குறைபாடுகள் பற்றித் தெரிவித்தனர். (122)

## துளிகள் நூல் வெளியீட்டு விழா

பல்துறைசார் ஆக்கங்களின் தொகுப்பான மா. மகாநேசனின் 'துளிகள்' - நூல் வெளியீட்டு விழா, உடுபபிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆசிரியர் க. கனகேஸ்வரன் தலைமையில் எதிர்வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் பிரதம விருந்தினராகவும், யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர் வி.கவிதா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# வெள்ளநீர் தேக்கத்தால் மாணவர்கள் சிரமம்

மானிப்பாய் மொமேறியல் பாடசாலை வீதியில் மழைநீர் தேங்கி நிற்பதால், அந்தப் பாதையூடாக போக்குவரத்துச் செய்யும் மக்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இந்த வீதியில், தற்போது பெய்து வரும் மழையால் நீர் தேங்கி நிற்கிறது. இதனால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் சப்பாத்துக்களுடன் செல்ல முடியாதநிலை காணப்படுகிறது.

அத்துடன், இந்தப் பாதையூடாக போக்குவரத்து செய்யும் அனைவரும் தேங்கி நிற்கும் நீரில் நனைந்து செல்லவேண்டியுள்ளது. இதனால் அவர்கள் பெருஞ்சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். (206)

## ஆன்மீக சொற்பொழிவு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான பெரியாழ்வார் ஆச்சிரமத்தில், பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் இடம் பெற்று வரும் சொற்பொழிவுத் தொடரில், இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி யளவில் 'சமய வாழ்வும் சுகாதார பழக்கவழக்கங்களும்' என்ற தலைப்பில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் சண்முகம் தேவன் சொற்பொழிவாற்றவுள்ளார். (20)

## சாயிநிலையத்தில் மகளிர்தின நிகழ்வுகள்

யா. பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் மகளிர் தின நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் இடம்பெறவுள்ளது. விசேட நிகழ்வுகளாக திருவிளக்குப் பூசை, கருத்துக்களம், நாடகம் என்பன இடம்பெறும். மருத்துவ பீட உளவளத்துணையாளர் சாவித்திரி ரவிச்சந்திரன் "வன்முறையற்ற தொடர் பாடல்" பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (111)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

எட்டாவது அகவையில்



பெயர் : கிஷானி
முகவரி : லண்டன்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------
முகவரி :------------------
பிறந்த ஆண்டு:------------------



கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றோர் ஒப்பம்


# சின்னஞ்சிறு செய்திகள்

## குருகுல கட்டட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டு வருடங்களாக கொழும்புத்துறை யோகர்சுவாமிகள் மகளிர் குருகுலக் கட்டடத்தில் இயங்கி வந்த ஸ்ரீ காயத்திரி கமலா பெண்கள் குருகுலத்துக்கான புதிய கட்டம் ஒன்று பலாலி வீதி (அரசடிக்கு அருகில்), திருநெல்வேலியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இந்தக் கட்டடத் திறப்பு விழாவில் ஊர்காவற்துறை மாவட்ட நீதிபதி அ.பிரேமசங்கர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதி சுவாமி ஸ்ரீ ராஜ்குமார் அருள் ஆசி வழங்கவுள்ளார். (48)

## தென்மராட்சிகோட்ட ஆசிரியர்களுக்கு

பாடசாலை மட்டக் கணிப்பீடு 1 ஏபி, 1 சி பாடசாலைகளாயின் பொறுபபான ஆசிரியர் உட்பட, பாடஙகளைக் கற்பிக்கும் 2 ஆசிரியர்களும் - தரம் II, தரம் III பாடசாலைகளாயின் - கணிப்பீட்டுக்குப் பொறுப்பான 1 ஆசிரியரும், இன்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயலமர்வு - யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 8.30 - 4.30 வரை இடம்பெற இருப்பதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (29)

## ஒருங்கிணைப்புக்குழு மற்றும் விவசாயக்குழு கூட்டம்

யாழ். மாவட்ட விவசாயக் குழுக் கூட்டமும், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் நாளை யாழ். செயலகத்தில் அரச அதிபர் சிவசுவாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்களைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## மகளிர் அமைப்புக்கள் தலைவருக்கு வாழ்த்துக் கேடயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மகளிர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து, தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு வாழ்த்துக் கேடயம் ஒன்றை வழங்கவுள்ளனர்.

நாளை மறுதினம் கிளிநொச்சிக்கு சென்று, அரசியற்துறை மகளிர் பொறுப்பாளரிடம் வாழ்த்துக் கேடயத்தைக் கையளிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## விவசாய சம்மேளனத்துக்கு புதிய கட்டடம்

அரியாலை விவசாய சம்மேளனத்துக்கான புதிய கட்டடம் ஒன்று - நிகொட் உதவியுடன் அரியாலை தபாற்கட்டைச் சந்திக்கு அண்மையிலுள்ள பகுதியில் கட்டப்பட்டு, தற்போது அது பூர்த்தியாகும் நிலையில் உள்ளது.

மிக விரைவில் இந்த அலுவலகத் திறப்புவிழா நடைபெறும் என அதன் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தெரிவித்தார். (55)

## பயிற்சிக்காக சிங்கப்பூர் செல்லவுள்ளனர்

சிங்கப்பூர் முகாமைத்துவ நிறுவனம் (**Singapore Institute Of Man-age ment - SIM**) நடத்தும் **ESSENTIAL MANAGEMENT TEQNIQUE** முக்கியமான முகாமைத்துவ செய்வகை நிபுணத்துவ கற்கையில் கலந்துகொள்ள தேசிய சேமிப்பு வங்கி திருநெல்வேலிக் கிளை முகாமையாளர் இ.ராஜாமகேந்திர சிங்கம் - மன்னார் கிளை முகாமையாளர் சந்தியா பெர்னாண்டோ செசாரியஸ் ஆகியோர் தலைமை அலுவலகத்தால் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இப்பயிற்சியில் கலந்து கொள்ள வெகு விரைவில் சிங்கப்பூர் பயணமாகவுள்ளனர்.

## நாடகப் போட்டி

மாவீரர் தினத்தை முன்னிட்டு, இணுவில் கலாஜோதி சனசமூக நிலையம் நடாத்தும் நாடகப்போட்டி இன்று காலை 9.00 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மண்டபலத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு விண்ணப்பித்தவர்கள் - போட்டிக்கான சகல ஏற்பாடுகளுடனும் குறித்த நேரத்துக்கு சமூகமளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் -தமது எல்லைப்பரப்பிலுள்ள மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 1 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பும், கலை நிகழ்ச்சியும், உரைகளும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் மாவீரர் வாரத்தில் சங்கப் பணியாளர்கள் சிரமதானம் செய்வதற்கும், கிளைகளை அலங்காரப்படுத்துவதற்கும், மாவீரர் தினநிகழ்வு அமைப்புக்குழு தீர்மானித்துள்ளது. (44)

◆

மாவீரர்களை உவந்தளித்த பெற்றோரைக் கௌரவிப்பதற்கான ஏற்பாடுகளை கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் ஒழுங்கமைத்துள்ளனர்.

இந்த நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

அன்று இரவு 7 மணிக்குப் பொதுக்கூட்டமும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.


◆

பண்ணாகம் பிரதேசத்தில் மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று மாலை 3 மணியளவில் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (207)

# விளையாட்டு அரங்கம்



## கோபுரக்கலசம்


சனத்ஜெயசூரிய வரவேற்கப்பட்டவன்

ஒரு கால கட்டத்தில் சனத் ஜயசூரியவுக்கு பந்து வீச முனையும் ஒருவர் மிகுந்த பதற்றம் கொண்டவராகவே இருந்திருப்பார். ஏனெனில் அவர் எத்திசையில் எப்படிப் பந்தைத் திருப்புவார் என்பதை பாரம்பரிய கிரிக்கெட் அவதானிப்பாளர்கள் தீர்மானித்துக் கொள்ள இயலாதவாறு அவரின் துடுப்பாட்டம் இருந்தது. இன்று அந்த வீச்சு சிறிது குறைந்தாலும் திறமையில் எவ்வித குறையும் இல்லை.

டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் இந்த நிமிடத்தின் சாதனை சனத்துக்கு உரியது. 94 டெஸ்ட் போட்டிகளில் 6388 ஓட்டங்களும், 332 ஒரு நாள் போட்டிகளில் 9853 ஓட்டங்களும் பெற்றிருக்கிறார் இவர். மேலும் அதிக டெஸ்ட் ஆட்டங்களில் பங்கு கொண்ட இலங்கை வீரரும் சனத்ஜெயசூரியவே.

சனத் 1991 இல் நியுசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்கான அணியில் பன்னிரெண்டாவது நபராகவே சேர்க்கப்பட்டிருந்தாலும், எதிர்பாராமல் பதினொரு பேருக்குள் ஒருவராக அறிவிக்கப்பட்ட போது அதுவே அவரது முதல் டெஸ்ட் போட்டியாக அமைந்தது. இருந்தும் இவருக்கான டெஸ்ட் இடம் என்பது அவ்வளவு ஸ்திரமானதாக இருக்கவில்லை. 1995 இல் அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியொன்றில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் றொசான் மகாநாம காயத்தின் காரணமாக விளையாட முடியாமற் போகவே, அந்த இடத்தை நிரப்புமாறு சனத் கேட்கப்பட்டார். அந்த டெஸ்ட் போட்டியில் சனத் பெற்ற ஓட்டங்கள் 42, 112. அன்று முதல் இன்று வரை சனத்தின் அந்த இடம் "அந்தமாதிரியான" இடமாக ஜொலித்துக் கொண்டே இருக்கிறது.

இதே போன்றே ஒரு நாள் ஆட்டங்களில் ஆறாவது, ஏழாவது துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிக்கொண்டிருந்த சனத். 1994 ஆம் ஆண்டு பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தின் போது றொசான் மகாநாம காயமடைய, அந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரருக்கான இடத்தை நிரப்பினார். அன்று முதல் அந்த இடம் சனத்துக்கென்றே ஒதுக்கப்பட்டுவிட்டது.


றொசான் மகாநாம
வழிசமைத்தவன்

அணித்தலைமை தனக்கு வந்த போது தான் மிகுந்த அதிர்ச்சியடைந்ததாகக் கூறும் சனத். அர்ஜூன ரணதுங்க போன்ற ஒரு வீரர் வகித்த பதவியை தான் ஏற்றுக்கொள்வது எவ்வளவு கடினமானது என்று தான் நினைத்ததாக கூறுகிறார். தனது காலத் தில் தாம் வென்ற டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகள் பற்றியும் திருப்தி அடைகின்றார் சனத். இருந்தும் தலைமைப் பதவி தனது துடுப்பாட்டத்தில் ஒரு தளர்ச்சியை ஏற்படுத்தியது என்று கூறும் அவர், துடுப்பாடச் செல்லும் போது, தான் அணித்தலைவர் என்பதையே மறந்து விடுவது வழக்கம் என்கிறார். நான்கரை வருடங்கள் தலைமை வகித்த இவர், இறுதியில் தன் மன விருப்பப்படியே தலைமைப் பதவியில் இருந்து விலகிக் கொண்டதாகவும் அந்த முடிவு பற்றி தான் இன்றும் திருப்தியாகவே இருப்பதாகவும் கூறுகிறார். மேலும் அணித் தலைவராக இருந்த போது, சுழல் பந்து வீச்சில் ஈடுபடத்தான் தயங்கியதாகவும் ஆனால் தற்போது அணித்தலைவர் மாவன் அத்தபத்துவும் பயிற்றுனர் ஜோன் டைசனும் தான் கூடுதலாகப் பந்து வீசுவதையே விரும்புவதாகவும் அவர் கூறுகிறார்.

மேலும் சில சுவையான விடயங்களை எடுத்துக் கூறுகிறார் சனத். ஆட்டமிழக்கச் செய்யக் கஸ்டமான துடுப்பாட்ட வீரர்களாக சச்சின் டெண்டுல்கர் மற்றும் திலான் சமரவீர இருவரையும் குறிப்பிடுகிறார். எதிர்கொள்ள மிகவும் கடினமான பந்து வீச்சாளராக வசீம் அக்ரத்தைச் சுட்டிக் காட்டுகிறார். மறக்க முடியாத நிகழ்வாக இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 340 ஓட்டங்கள் பெற்றதையும், அதே போல அந்த அணிக்கெதிராக ஒரு நாள் போட்டியில் 189 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்த ஏமாற்றமான கணங்களையும் நினைவு கூருகிறார்.

2007 இல் உலகக் கிண்ணத்தை இலங்கை மீண்டும் ஒரு முறை வெல்ல வேண்டும் என்றும், அந்த அணியில் தான் ஒரு அங்கத்தவராக இருக்க வேண்டும் என்றும் விரும்பும் அவர், இயன் டானியல், ம•ஃரூப், ஜெகான் முபாரக், கண்டாம்பி போன்ற இளம் வீரர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டு அவர்கள் உள்வாங்கப்படவேண்டும் என்கிறார்.

சனத் மிகுந்த மரியாதை பெற்ற அதே போல மற்றோரை மரியாதையுடன், கண்ணியத்துடன் நடத்தும் ஒரு வீரர். எந்த நிலையிலும் ஒரு சாமானியனாகவே வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு மகத்தான சகாப்தம் சனத் ஜெயசூரிய.

- நிர்மலன்.

## பின் கதவு நுழைவுச்சீட்டா?


டரன் லீமன்
உன்வீட்டுப் பிள்ளை

அவுஸ்ரேலிய அணியில் ரிக்கிபொன்டிங் உடைய இடத்தைத் தற்காலிகமாக நிரப்ப உள்வாங்கப்பட்டவர்தான் மைக்கல் கிளார்க். இந்தியாவில் அவரது திறமை எவ்வாறு வெளிப்பட்டது என்பதை ரசிகர்கள் நன்கறிவார்கள். இதன் தொடர்ச்சியாக மீண்டும் ரிக்கி பொண்டிங் அணிக்குள் வரும் போது, வெளியேறப் போகிறவர் யார் என்ற கேள்விக்கு டரன் லீமன்தான் அந்த நபராக இருக்கக்கூடும் என்று எதிர்வு கூறப்பட்டது. இருந்தும் இந்தியாவில் நடைபெற்று முடிவடைந்த நான்காவது டெஸ்ட் போட்டியில், ரிக்கி பொண்டிங் பங்குகொண்டபோது காயம் காரணமாக டரன் லீமன் பங்கு கொள்ளவில்லை. இதனால் சர்ச் சைக்கு இடமில்லாமற் போய் விட்டது.

இப்பொழுது அவுஸ்ரேலிய அணி நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்கான அணியை அறிவித்துள்ள நிலையில்தான் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. அதாவது இடத்தை இழப்பார் என்று நம்பப்பட்ட டரன் லீமன். அணிக்குள் நுழைந்துகொள்ள இந்தியச் சுற்றுப் பயணத் தின்போது தன் திறமையைக் காட்டிய சைமன் கட்டிச் அணியில் இருந்து நீக்கப் பட்டுள்ளார்.

இதனால் நியாயபூர்வமாகவே சைமன் கட்டிச் பொறுமை இழந்துள்ளார். இந்திய சுற்றுப் பயணத்தின்போது டேமியன் மார்ட்டின் மைக்கல் கிளார்க் இருவருக்கும் அடுத்த தாக கூடிய ஓட்டங்களுடன் மூன்றாவது இடத்தில் இருந்தவர் இவர். அவ்வளவு திறமையைக் காட்டாத டரன் லீமனுக் காக இவர் பலியாக்கப்படுவதை யார்தான் ஏற் றுக் கொள்ளமுடியும்? இந்தமுறை மட்டு மல்ல, இதற்கு முன்னருங்கூட நான் இப்படி யாகப் பலிக்கடாவாக்கப்பட்டுள்ளேன் என்கி றார் சைமன்கட்டிச். இரண்டு தடவை பாதிக் கப்பட்டதன் பின்பும் இதுபற்றிப் பேசா மல் இருக்க என்னால் முடியாது என்கிறார் அவர்.


சைமன் கட்டிச்
வாயில்லாப் பூச்சி

முன்னதாகக் கடந்த மார்ச்மாதம் இலங்கைக் கான 3 டெஸ்ட் சுற்றுப் போட்டியில் அன்ரூ சைமன் ஸ்ஸுக்காக சைமன்கட்டிச் தன் இடத்தை இழந்தார். இந்த இரு சந்தர்ப்பங்களிலும் நான் எதுவும் பேசாது. பேசாமடந் தையாக இருந்து கொண்டதுதான் பிழையாகப் போய்விட்டது போலத் தெரிகிறது. என்னுடன் கதைத்த சிலர்கூட நீ மிகவும் மென் போக்கைக் கொண்ட வனாக இருக்கிறாய் என்று என்னைக் குற்றஞ் சாட்டுகிறார்கள் என்கிறார். இங்கு வெளிப் படையாக ஒரு உண்மை தெரிவது மனதுக்கு நெருடலாக இருக்கிறது. சீர்தூக்கிப் பார்க்கும் போது சைமன் கட்டிச் நியாயமற்றுத் தண்டிக் கப்பட்டுவிட்டார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

- கலா.

## கற்க நிற்க அதற்குத்தக

சில திறமை வாய்ந்த தடகள வீரர்கள், அதிதிறமை வாய்ந்த வீரர்களின் வெற்றியின் காரணமாகப் பேசப்படாமல் போய்விடுவதுண்டு. இன்னொருபுறம் சில வீரர்க ளாலேயே அவர்கள் வாழும் நாடு, பல மில்லியன் மக்களின் வாயில் உச்சரிக் கப்படுவதுமுண்டு. இந்த இரண்டு உதாரணங்களுக்கும் ஒருவரைக் கூறலாம். அவர்தான் நமீபியா நாட்டின் குறுந்தூர ஓட்ட வீரர் பிரான்கி பிரெட்றிக்ஸ். ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் 200 மீற்றர் ஓட்டம், இவரது தடகள வாழ்வின் விடைபெறும் நிகழ்வாக இருந்தது. எனது இறுதி நிகழ்வில் ஒரு பதக்கத் துடன் விடைபெற எண்ணியிருந்தேன்.

ஆனால், நினைப்பதெல்லாம் நடந்து விடுவதில்லையே என்று கூறும் இவர் - ஏதென்ஸ் 200 மீற்றர் ஓட்டத்தில் பெற்றுக்கொண்ட இடம் நான்காவது. அமெரிக்க வீரர் ஷோண் குறோபோட் தங்கம் வெல்ல எடுத்துக்கொண்ட நேரம் 19.79 செக்கன்கள். இங்கு ஒரு சுவாரஸ்யமான உண்மை உண்டு. அதாவது தற்போது 37 வயதாகும் பிரான்கி 1996 இல் அட்லாண்டாவில் இதே நிகழ்வில் வெள்ளி வென்றவர். இதேவேளை மைக்கல் ஜோண்சன் தங்கம் வெல்ல எடுத்துக் கொண்ட நேரம் 19.32 செக்கன்கள். பிரான்கி வெள்ளிப் பதக்கம் பெற எடுத்துக்கொண்ட நேரம் 19.68 செக்கன்கள். இந்த நேரக் கணிப்பே இரண்டாவது இடத்துக் கான உலக சாதனை நேரமாக இன்றும் இருக்கிறது என்பதே ஆகும்.


பிரான்கி பிரெட்றிக்ஸ்

எல்லோரும் சின்னவயதில் தங்களுக்கு ஒலிம்பிக் போட்டியில் ஒரு பதக்கம் பெறும் ஆசை இருந்தது என்பார்கள். ஆனால், இவர் வித்தியாசமாகப் பேசுகிறார். அந்தக் காலத்தில் தென்னாபிரிக்க இனவாதக் கொள்கையால் நசுக்கப்பட்டிருந்த எங்களுக்கு, அந்தளவு உயரத்துக்குச் சிந்திக்க முடியவில்லை. ஒரு சிறுவனாக விளையாட்டுப் பற்றியே சிந்திக்கவில்லை. பின்னர் தடகள வீரனாக மாறிய வேளையில், தென்னாபிரிக்கப் போட்டிகளில் ஒரு பதக்கம் வென்றாலே காணும் என்ற எண்ணம் மட்டுமே இருந்தது என்கிறார்.

இவரால் பல போட்டிகளில் வெள்ளிப்பதக்கம் பெறவே முடிந்திருந்தது. காரணம் அமெரிக்காவின் மைக்கல் ஜோண்சன். இவர் தனது நிகழ்வுகளான 100 மீ., 200 மீ., நீளம் பாய்தல் போட்டிகளில் உலக சம்பியன் ஷிப் போட்டிகள், கொமன் வெல்த் போட்டிகளில் நிறையவே தங்கம் வென்றவர். இவரது பண்பும், பணிவும் எல்லோராலும் விதந்துரைக்கப்படுவது. அது மட்டுமல்ல, பிரான்கி சிறந்ததொரு கல்விமான். இவர் ஒரு கணினி விஞ்ஞானப் பட்டதாரி. அதோடு MBA பட்டத்துக்கும் சொந்தக்காரர். அமெரிக்கப் பல்கலைக் கழகத் தில் இந்தப் பட்டங்களைப் பெற்றுக்கொண்டவர் இவர். இவரது பெயரால் நமீபியாவில் நிறுவப்பட்டுள்ள அறக்கட்டளை நிறுவனம் ஒன்று, இளம் தடகள வீரர்களை ஊக்குவிக்க வும், அவர்களது கல்வி வளர்ச்சிக்காகவும் அரும் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அதன் முழுப்பொறுப்பும் இவரையே சாரும்.

- செந்தூரன்.

# தீர்ப்புக்கள் திருத்தப்படலாம்



கங்கூலி
உன்னிடம் மயங்குகிறேன்

கங்கூலி எதைச் செய்தாலும் அதில் விளையாட்டுடன் ஒரு வீரம் இருக்கும். இப்பொழுது என்னடாவென்றால் அதில் ஒரு சாதனையும் இருக்கிறது. Slow Over Rate என்றவகையில் குற்றச் சாட்டுக் கள் பல சந்தர்ப்பங்களில் அணித் தலைவர்களால் அனுபவிக் கப்பட்டவை தான். ஆனால் இதே குற்றச் சாட்டுக் காக இரண்டு டெஸ்ட் ஆட்டங் களில் இரு ந்து இடை நிறுத்தம் பெற்றது இதுவே கிரிக்கெட் வரலாற் றில் முதற் தடவை. அந்தப் பெயரைத் தட்டிச் செல்பவர் கங்கூலி. அந்தப் பழியைச் சுமந்து செல்பவர் கிளைவ்லொயிட். இதெல்லாம் தெரிந்த கதை.



கிளைவ் லொயிட்
தடியெடுத்தவர்

ஆனால் புதுக்கதை என்னவென் றால் இம்ரான்கான் வஸீம் அக்ரம் இரு வரும் கங்கூலிக்கு அனுதாபம் தெரி வித்து அவர் பக்கம் நின்றதுதான். இவ் வளவு கடுமையான தண்டனை எதற்கு என்று நான் ஆச்சரியப்பட்டேன். நேரம் சென்றமைக்கு நியாயமான காரணங் களே இருந்தன. கங்கூலி மீது இந்த விடயத்தில் இவ்வளவு கடுமை காட்டியிருக்கத் தேவை யில்லை என்கிறார் மிகவும் பிரபல்யம் வாய்ந்த கிரிக்கெட் வீரர் இம்ரான் கான்.



வஸீம் அக்ரம் தனது குறிப்பில்— கங்கூலி யையும் அணி வீரர்களையும் தற்போதைக் குத் தொல்லைப்படுத்தாதீர்கள். அவர்க ளுக்கு எல்லோரும் ஆதரவைத் தெரிவியுங் கள். நீண்டகாலம் தளர்வுநிலை இந்திய அணிக்கு இருக்கப் போவதில்லை என்று கூறியிருக்கி றார்.

நீர் அடித்து நீர் விலகாது. இந்திய உப கண்டத்துக்குள் பல கண்டங்கள் இருந்தாலும், ஒரே சகோதரத்துவம் இருக்கிறது. இம்ரான் கான், வஸீம் அக்ரம் இருவரும் கங்கூலியின் பக் கம் நின்று பேசுவது இதையே எடுத் துக் காட்டுகிறது.

இது ஒருபுறம் இருக்க கிளைவ் லொயிட் மிகச் சிறந்த ஆட்டமத்தி யஸ்தர். அவரது தீர்ப்புகள் பற்றிச் சொல்லத் தேவையில்லை. எனவே எதிர்காலத்தில் அவுஸ்ரேலியா, இங்கி லாந்து அணிகள் விடயத்தில் ஏற் படும் சர்ச்சைகள் தீர்ப்புகள் தொடர்பாக இதே கடுமையையும் நேர்மை யையும் கிளைவ் லொய்ட் கடைப்பிடிப்பார் என்றே எதிர்பார்ப்போம். அப்படி இல்லாமல் சறுக்கினால் அவரது புகழுக்கு அபகீர்த்திதான், அதைத் தடுக்கமுடியாது.

— ஜெயா.

# வெல்வதிலும் ஒரு பாங்கு உண்டு

கொலைக் குற்றச்சாட்டின் பேரில் காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் கைது செய்யப்பட்ட அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள், இந்திய மக்களுக்கு இன்னொரு அதிர்ச்சி. அதுதான் இந்திய கிரிக்கெட் சபையின் பவளவிழா (Platinam Jubilee) ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானுடனான தோல்வி.

பாகிஸ்தானுடன் தொடர்ந்து மூன்றுமுறை தோல்விகண்ட இந்திய அணி சொந்த மண்ணில் அந்தத் தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்ற எதிர்பார்ப்பு பலரிடமும் இருந்தது. அதற்கேற்றாற்போல் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றுத் துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்து 292 ஓட்டங்களைக் குவித்தபோது வெற்றி நிச்சயம் என்று இந்தியர்கள் இறுமாந்திருந்ததிலும் அது தவறில்லை.

ஏனென்றால் ஈடன் கார்டன் மைதானத்தில் பகலிரவு ஆட்டங்களின் இரண்டாவது இனிங்ஸ் துடுப்பாட்டம் மிகவும் சவாலானது. இதுவரை அங்கு மின்னொளியில் துடுப்பெடுத்தாடிய அணிகளின் சராசரி ஓட்டக்குவிப்பு வெறும் 189 மட்டுமே.

அதிலும் இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடிய எந்த அணியும் வென்றதே சரிதம் இல்லாத ஈடன் கார்டன் மைதானத்தில் 293 என்ற வெற்றி இலக்கை எட்டுவதென்பது கடந்தகால வரலாற்றுப் பெறு பேறுகளை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது அது கடின மானதுதான்.



சாஹிட் அப்ரிடி
பருவகாலப் பயில்வான்

இந்த மைதானத்தில் ஒரு அணி பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். இதுவரைகாலமும் முதலில் துடுப்பெடுத்தாடிய அணிகள் சுமார் 220- 240 வரையான ஓட்டங்களையே பெற்றிருந்தன. ஆனானப்பட்ட அவுஸ் ரேலியாவே இந்த மைதானத்தில் 235 ஓட்டங்களையே பெற்றிருந்தது. ஆகவே இந்திய அணி 292 ஓட்டங்கள் குவிக்கும்போதே ஆடுகளம் பற்றிய ஒரு சந்தேகம் கிளர்ந்தெழுந்துவிட்டது.

அவ்வாறே இந்த வெற்றி இலக்கைப் பாகிஸ் தான் சென்றடையுமா என்றொரு சந்தேகமும் கூடவே ஏற்பட்டதும் உண்மைதான். ஆனாலும் கடந்த மாதம் லாகூரில் நடைபெற்ற பாக்ரெல் கிண்ண இறுதி லீக்போட்டியில் இலங்கை அணி பெற்ற 293 ஓட்டங்களை வெகு சுலபமாகக் கடந்திருந்தது 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றிருந்தது பாகிஸ்தான் அணி. அதைவைத்துப் பார்க்கும்போது காற்று அவர்கள் பக்கமே அடித்தது.

பாகிஸ்தான் தனது ஆட்டத்தை தொடங்கியபோது யாசீர் ஹமீட் - இம்ரான் பர்ஹத் ஆரம்ப ஜோடிகளுக்குப் பதிலாக பரீட்சார்த்தமாகக் களமிறங்கியது சல்மான் பட் - யுனிஸ்கான் ஜோடி. இந்தப் போட்டியில் ஆட்டநாயகன் விருதைப்பெறுவேன் என்று கூறியவர் யுனிஸ்கான். அவர் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்ததுவரைதான் அதிஸ்டம் இந்திய அணிவசம் இருந்தது எனலாம்.

அதன்பின்னர் சல்மான் பட், சொகைப்மலிக், இன்ஸமாம் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தாலும், இந்திய அணியின் மோசமான பந்து வீச்சாலும் பவளவிழாக் கிண்ணத்தை பாகிஸ்தானுக்கு விமானமேறவைத்துவிட்டனர் இந்திய அணியினர்.

இவ்வாறே - 1980 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் இந்திய கிரிக்கெட் சபையின் பொன்விழாவை (Golden Jubilee) முன்னிட்டு இந்திய - இங்கிலாந்து அணிகளிடையே நடைபெற்ற ஒரேயொரு டெஸ்ட் போட்டியிலும் இந்திய அணி தோல்வி அடைந்திருந்தமையும் இங்கு நினைவுகூரத்தக்கது.

இந்திய நட்சத்திரத் துடுப்பாட்டவீரர் டெண்டுல்கர் மீது இந்தப் போட்டியில் சற்று அதிகமான எதிர்பார்ப்பு இருந்தது. மூன்றுமாதகால ஓய்வின் பின்னர் விளையாடிய முதல் ஒருநாள் போட்டி என்பதால். அவருடைய ஆரம்பம் அசத்தலாக இருந்தாலும் 16 ஓட்டங்களில் அப்துல் ரஸாக் விட்ட பிடியும், யுனிஸ்கானால் ரன் அவுட்டானதும் கடந்த உலகக் கிண்ணப் போட்டியை ஞாபகமூட்டின.

உலகக் கிண்ணத்தில் சச்சின் 36 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, ரஸாக் பிடியைத் தவறவிட்டிருந்தார். இறுதியில் 98 ஓட்டங்களில் அவரை ஆட்டமிழக்கச் செய்து யுனிஸ்கான் பிடித்த பிடிதான்.

அவ்வாறே கடைசியாக 1999 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டபோது கொல்கத்தாவில் விளையாடிய டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இனிங்ஸிலும் டெண்டுல்கர் ரன் அவுட் முறையிலேயே ஆட்டமிழந்திருந்தார்.

கங்கூலியைப் பொறுத்தவரையில் முன்பு ஒருதரம் பேட்டியொன்றில் - சொந்த மண்ணான கொல்கத்தாவில் சதமடிக்கவேண்டு மென்று கூறியிருந்தார்.

ஆனாலும் அந்தத் தனிப்பட்ட தன் ஆசையைப் புறந்தள்ளி வைத்துவிட்டு அணியின் நலன்கருதி நான்காவது வீரராக இறங்கித் தனது பங்களிப்பைச் சிறப்பாகவே செய்திருந்தவர்.

ஆனால், வளர்ந்துவரும் இளம் வீரரான இர்பான் பதானின் செயற்பாடுகள்தான் சிறப்பாக இருக்கவில்லை. யுகானாவுடன் நேரடியாக மோதியதைத்தான் இங்கு குறிப்பிடுகின்றோம்.

ஏற்கனவே அவர் இந்த வருட முற்பகுதியில் அவுஸ் ரேலியாவில் நடைபெற்ற VB கிண்ணத் தொடரில் பேபியன் மார்ட்டின் ஆட்டமிழந்து சென்றபோது கைகொட்டி அநாகரிக மாக நடந்துகொண்ட தற்காகப் போட்டி நடுவரால் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தார். ஆனால் இந்தமுறை போட்டிப் பணத்தின் 50 வீதத்தை அபராதமாகச் செலுத்துமளவுக்கு வசமாக மாட்டிக்கொண்டார்.

இந்த விடயத்தில் அணியின் மூத்த வீரர்களைப் பின்பற்றி இர்பான் பதான் நடந்துகொள்வது அவசியம்.

—விமலன்.

# இரு மலர்கள்

இந்தவருடம் முடிவடையும் நிலையில் இறுதியாக நடைபெற்ற ரெனிஸ் போட்டி கள் லொஸ் ஏன்ஜல்ஸ் நகரில் நடைபெற்ற WTA TOUR சம்பியன்ஷிப் போட்டி களாகும். இந்தப் போட்டிகளின் அரை இறுதிப் போட்டிகள் திடீரென்று ஒரு ஆர்வத்தை ஏற்படுத்திவிட்டது. இதற்கொரு காரணம் உண்டு. இந்த வருடம் விம்பிள்டன் இறுதிப் போட்டிகளில் சந்தித்தவர்கள் செரினா வில்லியம்ஸ் மற்றும் பதினேழே வயதான மரியா ஷரபோவா. இந்த இறுதி ஆட்டத்தில் 6 - 1, 6 - 4 என்ற செட்கணக்கில் செரினா தோற்றபோது ரெனிஸ் உல கம் அதிர்ந்தது.



செரீனா வில்லிம்ஸ்
உபாதையின் பரிசு

இப்பொழுது என்னடாவென்றால் இந்தஇருவருமே WTA இறுதிப் போட்டியில் மோதும் தகுதியைப் பெற்றுள்ளார்கள். WTA போட்டிகளில் வென்றால் தற் போதைய முதற்தர வீராங்கனையான அமெரிக் கப் பெண்மணி லின்ட்ஸே டெவொன் போர்ட் டைப் பின்தள்ளி தான் முதலிடம் பெறலாம் என்று எதிர்பார்த்திருந்த பிரான்ஸ் நாட்டின் அமெலி மெரிஸ்மோவை, செரினா தட்டிவீழ்த்த அமெலி யின் கனவு தகர்ந்தது. மறுபுறம் பிரெஞ் ஓபன் சம்பியன் பட்டம்வென்ற அனஸ்ராசியா மிஸ் கீனா, விம்பிள்டன் சாம்பியன் ஷரபோவா அரை இறுதி ஆட்டமாக அடுத்த ஆட்டம் அமைந்தது. இங்கு இருவருமே ரஷ்ய வீராங்கனைகள். இதில் ஷரபோவா வெற்றிவாகை சூடினார். மிஸ்கீனா வின் இன்னொரு கனவும் கலைந்தது.

இருந்தாலும் இந்த இறுதிப் போட்டியில் செரினா விம்பிள்டன் கணக்குத் தீர்க்கும் எண்ணத்தில் இருந்தாலும், அவரது உடல்நிலை அவருக்கு எதிராகவே செயற்பட்டு விட்டது. முதல் செட்டில் வென்ற செரினா தனது காயத்தின் உக்கிரம் இரண்டாம் செட்டில் அதிகரிக்கும் என்று எதிர்பார்த்திருக்கமாட்டார். ஆனால் அதுவே நிஜமாகியது.



மரிய ஷரபோவா
மீண்டும் ஒருதரம்

இயற்கையாகவே அதீத திறமை கொண்ட ஷரபோவாவுக்கு இது சிறிது கூடுதல் சந்தர்ப்பத்தை வழங்கிய தென் னவோ உண்மை.4 - 6, 6 - 2, 6- 4 என்ற செட்கணக்கில் வென்ற ஷரபோவா, பின்னர் கருத்துக் கூறுகையில், இந்த வெற்றி எனக்கு அதிர்ச்சியைத் தந்தது என்றிருக்கிறார். மறுபுறம் ஷரபோவா வின் வெற்றியைப் பாராட்டிய செரினா, இந்தத் தொடரில் பங்குகொண்டதன் மூலம் தனது காயத்தை மேலும் அதி கரித்துக் கொண்டதும் இன்னும் சில காலம் அவஸ்தைப்படப் போவது தான் மிச்சம் என்றும் அங்கலாய்க் கிறார். எது எவ்வாறாயினும் இருவ ருமே உலகின் முன்னணி நட்சத்தி ரங்கள் என்பதில் இருபேச்சுக்கு இட மில்லை. இருந்தும் வெற்றி என்ற ஒரு வரையறை வரும்போது அது ஒருவராக மட்டும்தானே இருக்கமுடி யும். வித்தியாசம் அவ்வளவு மட்டும் தான்.

– ஜோஸப் கிருஷ்ணா.

விளையாட்டு அரங்கம்

# தமிழீழ மக்களின் ஓர் தேசிய வானொலியாக புலிகளின்குரல் வளர்ச்சி பெற்றுள்ளது

## தமிழீழ அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

எமது தேசத்தினதும், மக்களினதும் அரசியல், வாழ்வியல் பிரச்சினைகளை - செய்திகள், காத்திரமான நிகழ்ச்சிகளூடாக வெளிக்கொண்டுவரும் புலிகளின் குரல் வானொலி - பரந்துபட்டளவில் தமிழ் மக்களின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது.

இன்று ஐரோப்பிய நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் கூட கேட்டுவருகின்றனர். பதின்நான்காவது அகவையை நிறைவுசெய்யும் புலிகளின்குரல் வானொலி - இன்றைய ஊடகத்துறையின் நவீன மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு மேன்மேலும் வளர்ந்து எமது தேசத்தின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்ய, எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பூரிப்பும், மனநிறைவுமடைகிறேன் என புலிகளின் குரல் வானொலியின் 14 ஆம் ஆண்டு நிறைவுநாளை முன்னிட்டு, தமிழீழ அரசியறதுறைப் பொறுப்பாளர் சுபதமிழ்ச்செல்வன் அனுப்பிய வாழ்த்துச் செய்தியொன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் -

இன்று தமிழீழ மக்களின் ஓர் தேசிய வானொலியாக வளர்ச்சி பெற்று எமது தேசத்தின் உண்மை நிலையை வானலைகளில் வெளியுலகுக்குக் கொண்டுசெல்லும் புலிகளின குரல் வானொலி - தனது 14 ஆவது அகவையை நிறைவுசெய்வதையிட்டு பெருமகிழ்வும், பெருமிதமும் அடைகிறேன்.

எமது தேசத்தின் உண்மை நிலையை, களநிலை யதார்த்தத்தை திரிவுபடாது வெளியுலகுக்கு கொண்டுசெல்ல வேண்டுமென்ற எமது தேசியத் தலைவரின் எதிர்பார்ப்புக்கிணங்க தோற்றம் பெற்ற புலிகளின் குரல் வானொலி பல்வேறு இன்னல்கள் தடைகளைக் கடந்து படிப்படியான ஓர் வளர்ச்சிக் கட்டத்தை நோக்கி முன்னேறிச் செல்வது எம் எல்லோருக்குமே மகிழ்ச்சிக்கும் பெருமிதத்துக்குமுரியதொன்று.

இன்றைய உலகின் மூலைமுடுக்கெல்லாம் தனிமனிதன், குடும்பம், பாடசாலை, பல்கலைக்கழகம் என ஒவ்வொரு அம்சங்களிலும் ஊடகங்கள் தமது கருத்துப்பரப்பலின் ஊடாக பெரும் தாக்கங்களைச் செலுத்திவருகின்றன.

இன்று உலகில் உண்மைகள் மிகச் சாதுரியமாகத் திரிவுபடுத்தப்பட்டு, சக்திவாய்ந்த செய்தி ஊடகங்களால் பின்னப்பட்ட கருத்து வலைப்பின்னல்களுக்குள் இன்றைய மானிட சமூகம் பின்னிப்பிணைந்து நிற்கிறது. இந்தச் செய்தி ஊடகங்களின் உண்மைத்தன்மை என்பது தத்தமது தேச, பூகோள நலன்களினடிப்படையிலேயே மக்களின் மனங்களைச் சென்றடைகின்றன.

இவ்வாறானதோர் புறச்சூழலில், விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஓர் தேசிய இனம் என்ற அடிப்படையில் நாம் செய்தி ஊடகத்துறையில் இன்றைய அதன் வளர்ச்சிப்போக்குகளை உள்வாங்கிக் கொண்டவர்களாக, சமூக அரசியல் உலகில் அவற்றின் தாக்கங்களை விளங்கிக் கொண்டவர்களாக இருப்பது மிக அவசியம்.

இன்றைய உலகின் நவீன தொழிலநுட்ப, துறைசார்ந்த ஊடகவளர்ச்சிகளைக் கொண்டமைந்த எமக்கென்ற தனித்துவமான செய்தி ஊடகங்களை நாம் கட்டியெழுப்புவது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

சர்வதேச மட்டங்களிலும், தேசிய மட்டங்களிலும் செய்தி ஊடகங்களின் தாக்கங்கள் பெரும் அரசியல், ராஜதந்திர மாற்றங்களுக்கும், நகர்வுகளுக்கும காரணமாக அமைந்துவிடுகின்றன.

கடந்தகால, இன்றைய சர்வதேச அரசியல் உலகில் நிகழ்ந்த, நிகழ்ந்துகொண்டிருக்கும் சம்பவங்கள் இதனை எமக்கு தெளிவாக உணர்த்தி நிற்கின்றன. இன்று எமது விடுதலைப் போராட்டத்தில் எமது தேசத்தின் உண்மை நிலையை வெளிக்கொண்டு செல்லும் ஓர் தேசிய ஊடகமாக வளர்ச்சிபெற்றிருக்கும் புலிகளின்குரல் வானொலி இவ் வளர்ச்சியுடன் மட்டும் நின்றுகொள்ளாது, மேன்மேலும் வளர்ந்துசெல்ல வேண்டும்.

இத்துறையில் ஏற்பட்டுவரும் நவீன மாற்றங்களை விளங்கிக் கொண்டு, அதனை உள்வாங்கி புலிகளின்குரல் வானொலியை வளர்த்துச் செல்லவேண்டியது எம் எல்லோரினதும் கடமையாகும்.

எமது இத்தேசிய வானொலியை வளர்த்தெடுப்பதில், அதில் பல்வேறு பிரிவுகளிலும் அயராது பாடுபட்டு வரும் அதன் ஊழியர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




### விபத்தில் ஒருவர் காயம்

ஏ-9 பாதையூடாக பரந்தனை நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது, அதே வழியாகப் பின்னால் வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியதால் ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் - நேற்றுக்காலை 10.50 மணியளவில் கிளிநொச்சி பிரதேச செயலகத்துக்கு அண்மையில் நிகழ்ந்தது. இந்தச் சம்பவத்தில் உதயநகர் மேற்கைச் சேர்ந்த மதியழகி என்பவரே காயமடைந்தார். இவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.



**அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக ஆழியவளை - வெற்றிலைக்கேணி கடற்கரை வீதியான களிமண் வீதியை ஊடறுத்து மழை வெள்ளம் பாய்வதைப் படத்தில் காணலாம். (21)**

### கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரிப்பு

பூநகரி - கரியாலை நாகபடுவான் கிராமத்தில் கட்டாக்காலி காலநடைகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் பல பயன் தரு பயிரினங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கால்நடைகள் - இரவு வேளைகளில் வீதிகளில் நடமாடுவதால், வீதி விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்குமென இந்தப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

## செம்பியன்பற்று உப அலுவலகப் பணிமனை எதிர்வரும் 25 இல் திறந்துவைக்கப்படவுள்ளது

பருத்தித்துறைப் பிரதேச சபையின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட செம்பியன் பற்று உப அலுவலகப் பணிமனை - எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க. இராசையாவால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தத் திறப்பு விழா - பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் சி. பசுபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க. இராசையா, சிறப்பு விருந்தினர்களாக - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ஆர். ஜெயசீலன், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தீபன், வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத் தலைவர் சி. பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

போரால் சேதமடைந்த இந்த உப அலுவலகம் மூன்று லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

(122)

## மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் உள்ள 17 பாடசாலைகளில் காலை உணவு வழங்கல்

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி கல்விக் கோட்டப்பாடசாலை மாணவர்களுக்கு, உலக உணவுத் திட்டத்தினரின் அனுசரணையுடன் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது.

இந்தக் கோட்டத்தைச் சேர்ந்த 17 பாடசாலைகளிலும் கல்வி பயிலும் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஒன்பது வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கே கடந்த வாரம் முதல் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நடவடிக்கை காரணமாக இந்தப் பிரதேசத்தில் இடை விலகும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடையும் என பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (122)

## வன்னிப் பிரதேசத்தில் 2000 ஆம் ஆண்டு முதல் படையினரின் வெடிபொருட்களால் 29 பேர் உயிரிழப்பு

வன்னிப்பிரதேசத்தில் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இராணுவத்தினரின் வெடிபொருட்களில் சிக்கி 29 பேர் உயிரிழந்தனர்.

வன்னிப்பகுதியில் இராணுவத்தினரிடமிருந்து மீட்கப்பட்ட பகுதிகளில் மீளக் குடியமர்ந்துவரும் மக்களே - இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.

இந்தப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் புதைத்துவிட்டு அல்லது கைவிட்டுச் சென்ற வெடிபொருட்கள் வெடித்ததில் - மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

கண்ணிவெடிகளால் 74 பேரும், வெடிபொருட்களால் 58 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 15 பேர் உயிரிழந்தனர்.

2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவத்தில் 51 பேர் கண்ணிவெடிகளாலும், 51 பேருக்கு வெடிபொருட்களாலும், 23 பேர் வேறுவிதத்திலும் பாதிக்கப்பட்டதுடன், 23 பேர் உயிரிழந்தனர்.

தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு 15 பேர் கண்ணிவெடிகளாலும், 15 பேர் வெடிபொருட்களால், 17 பேர் வேறு விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 07 பேர் உயிரிழந்தனர்.

2003 ஆம் ஆண்டு 6 பேர் கண்ணிவெடிகளாலும், 9 பேர் ஏனைய வெடிபொருட்களாலும், வேறு விதத்தில் 9 பேரும பாதிக்கப்பட்டனர்.

இந்த ஆண்டில் 4 பேர் உயிரிழந்துமுள்ளனர் எனவும் தெரிய வருகிறது.

## கிளிநொச்சி பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் 15 ஆம் ஆண்டு விழாவும் ஆய்வுகூட திறப்பு விழாவும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் 15 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், புதிதாக அமைக்கப்பட்ட இரு மாடிக் கட்டடம் மற்றும் ஆய்வுகூட திறப்பு விழா, நூல் வெளியீட்டு விழா என்பன கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்றன.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டதை அடுத்து, தமிழீழ தேசியக் கொடியை விசுவமடு அரசியற்துறைப் பொறுப்பாளர் திலகன் ஏற்றிவைத்தார்.

பாடசாலையின் புதிய பெயர்ப் பலகையை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் பா.அரியரத்தினம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

புதிதாக அமைக்கப்பட்ட இரு மாடிக் கட்டடத்தை கிளிநொச்சி அரசாங்க அதிபர் இராசநாயகம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். ஆய்வுகூடத்தை வலயக்கல்விப் பணிப்பாளர் பா.அரியரத்தினம் திறந்து வைத்தார்.

இந்தப் பாடசாலையின் 15 ஆம் ஆண்டு நிறைவு நூலை வலயக் கல்விப் பணிப்பாளர் பா.அரியரத்தினம் வெளியிட்டு வைக்க, கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து கருத்துரைகள் இடம்பெற்றன.

## வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கிராமத்தில் 2005 ஆம் ஆண்டுக்கான தையல் பயிற்சி

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் -கட்டைக்காடு கிராமத்தில் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால், எதிர்வரும் 2005 ஆம் ஆண்டில் தையற்பயிற்சி வகுப்புக்கள் நாடாத்துவதெனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தத் தீர்மானம் அண்மையில் நடைபெற்றது. வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு, சுண்டிக்குளம் கிராம அலுவலர் பிரிவுகளில் இதற்கு முன்னர் தையற்பயிற்சி வகுப்புகள் எதுவும் நடைபெறவில்லை.

இந்தப் பிரதேசத்திலுள்ள இளம் பெண்கள் - இந்தப் பயிற்சியைப் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கு அடுத்த தையற்பயிற்சி வகுப்பை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மணற்காடு, பொற்பதி ஆகிய கிராமங்களை அண்டிய பகுதிகளில் நடாத்துவதெனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(21)

### சேறும் சகதியுமாகக் காணப்படும் சந்தை

பூநகரி - நாச்சிக்குடா சந்தைப் பகுதி வெள்ளத்தால் சேறும் சக்தியுமாகக் காணப்படுகிறது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முழங்காவில், நாச்சிக்குடா வேராவில், கிராஞ்சி, வலைப்பாடு, வெள்ளாங்குளம், போன்ற பிரதேச மக்கள் இந்தச் சந்தையைப் பயன்படுத்துவதால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால், சூழல் பாதிப்படைந்து, தொற்றுநோய்கள் பரவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக இந்தப் பிரதேச மககள் கவலை தெரிவித்துள்ளனர்.

## மன்னார் மாவட்டத்தில் கல்வித் துறைக்கு பங்காற்றிய மாவீரர்களின் நினைவு நாள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கல்வித் துறைக்குப் பெரும் பங்காற்றிய மாவீரர்களான - மேஜர் செங்கோட்டையன், கப்டன் நிக்சன் ஆகியோரின் நினைவு நாள் நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை மன்னாரில் இடம்பெற்றனி.

மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் காலை 11 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியை மன்னார் மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் வேங்கை ஏற்றி வைத்தார்.

மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

அடுத்து அரங்க நிகழ்வுகள் அடம்பன் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் கே.மனோகரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நினைவுரையை மடுவலய கல்விப் பணிப்பாளர் ஏ.ஏ.குரூஸ் நிகழ்த்தினார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக ஓம்பா*
*மெலியார்மேல் மேக பகை.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## வல்வைப் படுகொலைகளும், அதன் எதிரொலிகளும்!

நேற்றும், நேற்று முன்தினம் மாலையும் யாழ். குடாநாட்டில் நடைபெற்ற பொதுமக்கள் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அமைதியையும், சமாதானத்தையும் நேசிக்கும் மனித சமூகத்திற்கு அவற்றின் எதிர்காலம் குறித்து இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் அற்றுப் போகச் செய்துள்ளது.

வல்வை சிதம்பரக் கல்லூரி மைதானத்தில் உதைபந்தாட்டம் ஆடிக் கொண்டிருந்த இளைஞர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது இரு அப்பாவி இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே துடிதுடித்துப் பலியான கொடூர சம்பவத்தின் அதிர்ச்சி நிலை மாறுமுன்னரே, இந்தச் சம்பவம் தொடர்பாக தமது எதிர்ப்பையும், கண்டனத்தையும் உணர்ச்சிவசப்பட்ட கொந்தளிப்பு நிலையில் வெளிப்படுத்த முயன்ற மக்களை நோக்கி கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தின் போது அப்பாவிப் பொதுமகன் ஒருவர் படுகாயமுற்று, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிகழ்வையும் மிகச் சாதாரணமான வழமையான செய்திக்குரிய விடயமாகப் பார்க்கமுடியாது.

சம்பவத்தின் கொடூரம் அது நிகழ்ந்த இடம் அந்த இடத்தை சூழவுள்ள இராணுவப் பாதுகாப்பு நிலைகளின் அமைவிடங்களின் தன்மை, சம்பவத்தை மேற்கொண்டோர் செயற்பட்ட தோரணை அவர்கள் தப்பியோடிய விதம் அனைத்தையும் உன்னிப்பாக நோக்குகையில் இது நன்கு திட்டமிட்ட முறையில் ஏதோ ஒரு உள்நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகவும் இதன் பின்னணியில் கொலையாளிகளுக்குப் பாதுகாப்பாக வலுவான சக்தி இருந்துள்ளது என்றும் தெளிவாக உணரக்கூடியதாக உள்ளது.

சம்பவம் நிகழ்ந்த இடத்தில் நின்றோர்களும், உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஏனையோரையும் உறைந்து போக வைத்த இந்தச் சம்பவத்திற்கு மற்றொரு குழுவினரால் கொடுக்கப்பட்டுள்ள காரண விளக்கத்தையும் அதனை வெளிப்படுத்த அவர்கள் காட்டிய அணுகுமுறைகளும் கூட அந்தப் பின்னணி சக்தியின் மீதான மக்களின் சந்தேகத்தை உறுதி செய்யவே உதவுவதாகவும் உள்ளது.

இந்த இளைஞர்களின் படுகொலைச் சம்பவம் குறித்து கண்டன அறிக்கைகளை வெளியிட்ட யாழ். மாவட்ட அரசியற்துறை மற்றும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ஆகியோரின் அறிக்கைகள் அதனைத் திட்டமிட்ட சம்பவங்கள் என்றே வர்ணித்துள்ளன.

இன்றைய தினத்தில் இருந்து ஆரம்பமாகும் மாவீரர் வார நிகழ்வுகள் மற்றும் பொன்விழா அகவைகாணும் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் பிறந்தநாள் போன்றவற்றிற்கான ஏற்பாடுகள் பிரமாண்டமான அளவில் பொதுமக்களாலும், பொது நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நிகழ்ந்துள்ளதைக் கவனத்தில்கொண்டு பார்த்தால் – அர்த்தமற்ற, அப்பாவிப் பொதுமக்களை நோக்கி இந்தத் தாக்குதல் மேற்படி நிகழ்வுகளைப் பொறுக்காத சக்திகளால்தான் மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்ற பொதுமக்களின் கருத்துக்களை எந்தவிதத்திலும் நிராகரிக்க முடியாது.


மீசாலையில் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் வல்வைக் கொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்த மக்களின் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை படையினர் மேற்கொண்டமையானது, அவர்களது பொறுமையற்ற அவசர செயற்பாட்டையே எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய படைத்தரப்பின் ஆயுத பிரயோக நடவடிக்கைகள் எத்தகைய எதிர் விளைவுகளை உண்டுபண்ணும் என்பது சம்பந்தப்பட்ட படைத்தரப்பு அதிகாரிகளுக்கு தெரியாததல்ல. அப்படியிருந்தும் அவர்கள் அதனை மேற்கொண்டிருக்கிறார்கள் என்றால், திட்டமிட்ட வகையில் ஏதோவொரு உள்நோக்கத்துடன்தான் அவர்கள் இதனைச் செய்திருக்கிறார்கள் என்றே அர்த்தமாகும்.

அவர்களின் உள்நோக்கம் எது என்பதை விளக்கவேண்டிய அவசியமேஇல்லை. கடந்த சில தசாப்தகால வரலாற்று நிகழ்வுகளை மீள் பார்வை செய்தால் அதனைப் புரிந்து கொள்ளமுடியும்.

சம்பவம் நடைபெற்ற இடத்தைச் சூழவுள்ள இராணுவ, பொலிஸ் நிலைகள், மினிமுகாம் போன்றவற்றின் ஊடாக அவற்றைத் தாண்டி மோட்டார் சைக்கிளில் பாரிய ஆயுதத்துடன் வந்து படுகொலைகளை மேற்கொண்டு விட்டு கொலையாளிகள் பாதுகாப்பாகத் தப்பிச் சென்று விட்டார்கள் என்றால் கொலையாளிகளுக்கான பாதுகாப்பு பலமாக இருந்துள்ளது என்றுதானே அர்த்தம்.

வல்வைப் படுகொலையும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நேற்றைய நிகழ்வுகளும் மக்களின் கொந்தளிப்பும், ஹர்த்தால் நிகழ்வுகளும் மக்களின் உணர்ச்சிகளையும், எழுச்சியையும் இனிமேலும் துப்பாக்கி முனையால் அடக்க முடியாது என்ற செய்தியையே சொல்வதாக உள்ளது.

## நாடும் நடப்பும்




# ஹைஏஸ் மீதான சூட்டுச் சம்பவம்

# தடயப் பொருள் அநுராதபுரத்துக்கு மாற்ற நீதிமன்றம் தடை விதிப்பு!

வவுனியா மாவட்ட நீதிமன்றத்தின் வழக்குத் தடயப் பொருள் ஒன்றை அநுராதபுர நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கும் உத்தரவை வவுனியா நீதிவான் எம். இளஞ்செழியன் இரத்துச்செய்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் அநுராதபுரச் சந்தியில் வைத்து, யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்றின் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இது தொடர்பான மரண விசாரணையின்போது, சம்பவத்தில் ஈடுபட்ட பொலிஸார் மூவரை அநுராதபுர நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் இளஞ்செழியன் அநுராதபுரம் பிரதி பொலிஸ்மா அதிபர் ஜயவர்த்தனவுக்கு உத்தரவிட்டார்.

எனினும், நேற்றுமுன்தினம் வரை குறிப்பிட்ட பிரதிவாதிகள் அநுராதபுர நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய வவுனியா நீதிவான், குறிப்பிட்ட வழக்கு அநுராதபுரத்துக்கு மாற்றப்படுவதை இரத்துச் செய்தார்.

இதேவேளை - துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட வாகனம் மற்றும் வெற்றுத் தோட்டாவுடன் வவுனியா நீதிமன்றத்தில் உதவி பொலிஸ் அதிகாரி ஜயவர்த்தனவை உடனடியாக ஆஜராகுமாறும், நீதிவான் இளஞ்செழியன் உத்தரவிட்டார். குறிப்பிட்ட வாகனத்தை நிறுத்துமாறு தாம் உத்தர விட்ட போதும், அதனை மீறிச்சென்றபோதே அதன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனா.

எனினும், பொலிஸார் என அடையாளம் காணப்படாமை காரணமாகவே தாம் வாகனத்தை நிறுத்தவில்லை என குறிப்பிடட்ட வாகனத்தின் சாரதி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (01)

# வல்வெட்டித்துறை இளைஞர்கள் சுட்டுக்கொலை

# தமிழீழ விடுதலை இயக்கம் கடும் கண்டனம்

வல்வெட்டித்துறை விளையாட்டு மைதானத்தில் நின்றிருந்த இளைஞர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அப்பாவி இளைஞர்கள் இருவர் பலியான சம்பவத்துக்கு ரெலோ அமைப்பினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ரெலோ முதல்வர் சிறிகாந்தா அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில்-

கடந்த வெள்ளிக்கிழமை மாலை வல்வெட்டித்துறையில் அரச பயங்கரவாதத்துக்கு இளந் தமிழர்கள் இருவர் பலியாக்கப்பட்டிருக்கும் துயரச் சம்பவம், தலைவர் பிரபாகரனின் 50 ஆவது பிறந்த தினம் மற்றும் மாவீரர்கள் தினம் என்பனவற்றை முன்னிட்டு விழாக்கோலம் கொள்ளத் தொடங்கியிருக்கும் யாழ்.குடாநாட்டின் எழுச்சிக்கு, தலைவர் பிரபாகரன் பிறந்த மண்ணிலேயே வைத்து, சிங்களப் பேரினவாத அரச தரப்பிலிருந்து விடுக்கப்பட்டிருக்கும் பகிரங்கச் சவாலே இதுவாகும்.

அதேநேரத்தில் யாழ்.குடாநாட்டில் நிலவிக் கொண்டிருக்கும் மிக மிருதுவான சமாதானச் சூழ்நிலையை- மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் நிலைமைக்கு கொண்டு வருவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளின் ஆரம்பமாகவும் இந்தச் சம்பவத்தைக் கருதவேண்டியுள்ளது.

வல்வெட்டித்துறைப் படுகொலைகளுக்கான முழுப் பொறுபபையும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமே ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

எம்மினத்தின் நியாயமான அபிலாஷைகளுக்கு எதிராகத் தொடுக்கப்படும் இத்தகைய இனவெறித் தாக்குதல்களை எமது ஒற்றுமையின் பலத்தாலும், ஒன்றுபட்ட எழுச்சியின் வலுவாலும் சந்திப்பதற்கும், தோற்கடிப்பதற்கும் நாமனைவரும் தயாராகவே இருக்கின்றோம் என்பதை எதிர்வரும் 26,27 ஆம் திகதி நிகழ்வுகளின் வெற்றியின் மூலம் எமது மக்கள் சிங்களப் பேரினவாத அரசுக்கு உணர்த்தவேண்டும்.

இலட்சிய உணர்வுகளுடனும், இளமைக் கனவுகளுடனும் சிங்களப் பேரினவாத அரசின் பயங்கரவாதத்துக்கு பலியாகிப் போயிருக்கும் இரண்டு இளைஞர்களுக்கும் எம் அஞ்சலியைச் செலுத்துகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திறமைகாண் போட்டிப் பரீட்சையில் தொழில்நுட்பக்கல்லூரி முன்னணியில்

ஜப்பானிய ஜெய்கா நிறுவனத்தால் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட திறமைகாண் போட்டிப் பரீட்சையில் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, சம்மாந்துறை, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய ஆறு தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு இடையே தச்சுப்பயிற்சி, குழாய் பொருத்துதல், ஒட்டுதல், மின்னிணைப்பு ஆகிய நான்கு பாடநெறிகளில் போட்டிப் பரீட்சைகள் நடைபெற்றன.

இவற்றில் தச்சுப்பயிற்சி, குழாய் பொருத்துதல், ஒட்டுதல் ஆகிய மூன்று பாடநெறிகளில் யாழ்ப்பாணம் முதலாம் இடத்தைப் பெற்றது.

மின் இணைப்பில் மட்டக்களப்பு முதலாம் இடத்தைப் பெற்றது. போட்டிகள் யாவும் மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (122)

# பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாதோரும் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கலாம்

பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாதவர்கள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியும். அதற்குப் பதிலாக குறிப்பிட்ட நபரை உறுதிப்படுத்தும் சான்றிதழ் அல்லது பாடசாலை விடுகைப் பத்திரம் என்பவற்றை சமர்ப்பித்து தேசிய அடையாள அட்டையைப் பெறமுடியும் என ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் பி.பீ. அபயக்கோன் தெரிவித்தார்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாதவர்கள் இந்த சான்றிதழ்களைச் சமர்ப்பித்து தேசிய அடையாள அட்டையைப்பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் ஒரு வருடத்துக்கு 28 இலட்சம் பேருக்கு தேசிய அடையாள அட்டை வழங்கும் திட்டத்தின்கீழ் நாடு முழுவதிலும் 320 நடமாடும் சேவைகள் நடாத்தப்படவுள்ளன.

தற்போது ஒருநாள் சேவையின் மூலம் தினமும் 250 தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. கணினி மயப்படுத்தப்பட்டதும் நாளொன்றுக்கு 15 ஆயிரம் தேசிய அடையாள அட்டைகள் வழங்கமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (122)

- கருத்துருவாக்கம்: அருண்பிரசாத்

# தமிழீழ விடுதலைப் போராட்டம்— வரலாற்றுக் களஞ்சியமாகப் பரிணமித்துள்ளது



தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் உலகின் பல பாகங்களிலும் வாழும் தேசிய இனங்கள் தமது தியாகத்தைக் கருவூலமாகக் கொண்டு, தேசிய விடுதலை இயக்கங்களை உருவாக்கித் தமது விடுதலைக்காகப் போராடி வருகின்றன. ஸ்பெயினில் பாஸ்க் இனமக்களும், ஈராவில் குர்திஸ் இனமக்களும் விடுதலை இயக்கங்களை உருவாக்கிப் போராடி வருகிறார்கள். கியூபா மக்கள் பிடல் காஸ்ரோ தலைமையில் கெரில்லாப் போராட்டத்துக்கு முதன்மைத் தானம் கொடுத்துப் போராடி, ஒரு சோசலிச நாட்டை உருவாக்கினார்கள். பலஸ்தீன மக்களும், அயர்லாந்து மக்களும் முறையே பி.எல்.ஓ, ஐ.ஆர்.ஏ போன்ற விடுதலை இயக்கங்களை உருவாக்கிப் போராடி வருகிறார்கள்.

தமது இயக்கங்களில் இணைந்து கொண்ட விடுதலைப் போராளிகளுக்குத் தியாக உணர்வை ஊட்டும் முகமாக, இந்த இயக்கங்கள் ஏனைய விடுதலைப் போராட்ட இயக்கங்கள் பற்றியும், அவர்களது தியாகப் போராட்டங்கள் பற்றியும் எடுத்துரைத்து, அவர்களது போராட்ட அணுகுமுறைகள் பற்றிய கல்விப் போதனையைத் தமது உறுப்பினர்களுக்கும், மக்களுக்கும் எடுத்துரைத்து வருகிறார்கள். அத்தோடு விடுதலை இயக்கங்களின் தலைவர்கள் தமது போராட்ட அணுகுமுறைகளை, அனுபவங்கள் பற்றி எழுதிய நூல்கள், சஞ்சிகைகள், பிரசுரங்கள் இவர்களுக்குப் பாடவிதானமாகவும் அமைந்து விடுகின்றன. தான்பாரின், மைக்கல் கொலின்ஸ், ஓமார், முக்தார், ஜெனரல் கியாப், பிடல்காஸ்ரோ, ஹோச்சிமின், மாவோசேதுங், லெனின், சேகுவாரா போன்ற பெரும் தலைவர்களது உரைகள், கருத்துக்கள் இன்று உலகின் மூன்றில் இரண்டுபகுதி நாடுகளை ஆகர்சித்துள்ளன.

இலங்கையிலும் தமிழ்த் தேசிய வாதத்தைக் கருப்பொருளாகக் கொண்டு, போராளிகள் போராடலானார்கள். அவர்களும் வெளிநாட்டு விடுதலை இயக்கங்கள் பற்றிய நூல்களைப் படிக்கலானார்கள். அதே போல் ஏனைய கட்புல, செவிப்புல சாதனங்களான- வானொலி, திரைப்படம், வீடியோப்படங்கள் மூலம் விடுதலை இயக்கங்கள் பற்றிய கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டனர். **Wild geese, Operation Day Break, Killing, Paton Platoon** போன்ற யுத்தம் பற்றிய ஆங்கிலத் திரைப்படங்களும், கப்பலோட்டிய தமிழன், வீரபாண்டிய கட்டப்பொம்மன் போன்ற தமிழ்த்திரைப்படங்களும் இந்த வகையிலும் விடுதலைப்போராளிகளுக்கு போராட்ட உணர்வை ஊட்ட உதவின. தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்- இந்திய தேசிய இராணுவத்தின் தலைவர் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் தனது ஆதர்ச தலைவனாகக் கொண்டு, போராட்ட உணர்வுகளை வளர்த்துக் கொண்டதாக ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களான பகவத்சிங், ராஜகுரு, சுகதேவ், வாஞ்சிநாதன் போன்ற ஆயுதப் போராளிகளது வரலாறு, ஈழப்போராட்ட வீரர்களுக்கு உந்து சக்தியாக அமைந்தது. 1956 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஹர்த்தாலின் போது திருகோணமலையிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தின் மீது, பறந்த சிங்கக் கொடியை அறுத்தெறிந்து விட்டு, அக்கொடிபறந்த இடத்தில் துக்கத்தின் குறியீடாகக் கறுப்புக் கொடியை கட்ட முனைந்த திருமலை நடராசன், சிங்களப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்றது. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது கொடிகாத்த குமரனின் உயிர்த்தியாகம் அவரது உயிர்த்தியாகத்துக்கு ஈடாகக் கௌரவிக்கப்பட்டது.

ஆனால் இன்று உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் நிகழ்ந்த சம்பவங்களை விட, தியாகத்தின் எல்லையைத் தொட்டுவிட்ட சம்பவங்களும் பல தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் நிகழ்ந்துள்ளன. உலக விடுதலைப் போராடடங்கள் மூலம் தமிழ்த்தேசிய இனம் கற்றுக் கொண்ட பாடங்களைவிட, இன்றைய காலகட்டத்தில் தமது தேசிய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் இனங்கள் எல்லாம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இருந்து படிக்கவேண்டிய பாடங்கள் ஏராளம். குறிப்பாக 'சயனைட்' என்ற சொல்லை உலகில் உச்சரிக்கும் போது அதனுடன் விடுதலைப்புலிகளின் பெயரை இணைத்துச் சொலலும் அளவுக்கு இன்று சயனைட் அரசியல் அகராதியில் தனித்துவம் பெற்ற சொல்லாகிவிட்டது.

குர்திஸ்தான் கோரிப் போராடும் பஞ்சாபியர்களும், ஐரிஸ் விடுதலைப் போராளிகளும் இன்று சயனைட்டை தம்முடன் எடுத்துச் செல்கிறார்கள். பொட்டாசியம் சயனைட் இன்று ஒரு இரசாயனப் பொருள் என்பதைவிட, போராளிகள் தம்மையும் தமது இயக்கத்தில் இராணுவ இரகசியங்களையும் பேணிக்காக்கும் கேடயமாகப் பயன்படுத்தும் அளவுக்கு அரசியல் மயப்படுத்தப் பட்டுவிட்டது.

உலகிலேயே ஒரு விடுதலைப் போராட்ட வரலாற்றில் சயனைட் அருந்தி வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட போராளிகளது பெயர்ப் பட்டியலில், விடுதலைப்புலிகளின் எண்ணிக்கைக்கு நிகரான தொகையினரைக் கொண்ட போராளிகளின் எண்ணிக்கையை உலகில் வேறு எங்குமே காணமுடியாது. இது மட்டுமன்றி தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நிகழ்ந்த பல நிகழ்வுகள்- ஏனைய விடுதலைப் போராட்டத்தில் நிகழாத சம்பவங்களாகவும் உள்ளன. தியாக வரலாற்றைத் தன்னகத்தே உள்வாங்கிக் கொண்ட ஒரு போராட்ட வரலாற்றுக் களஞ்சியமாக, தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று பரிணமித்துள்ளது. ஈழப்போராட்ட அரசியலில் ஸ்தாபன மயப்படுத்தப்படாத நிலையில் ஆயுதப் போராட்டத்தின் முன்னோடியாக சிவகுமாரன் விளங்குகிறார். ✡

## தமிழீழ மாவீரர் நாள் - 2004

## மாவீரர் தம் ஈகமும், வீரமும் என்றுமே போற்றத்தக்கவை

தமது இன்னுயிரை ஈந்து, விடுதலைப் போருக்கு வீறுசேர்த்த மாவீரர்கள் அவர்களின் தலைமுறையிலேயே போற்றப்படவேண்டும். அவர்களின் வீரங்களும், ஈகங்களும் அருஞ்செயல்களும் மக்களிடம் எடுத்துச் சொல்லப்படவேண்டும், அந்த மாவீரர்களின் பெற்றோர்களும், குடும்பத்தினரும் அவலப்படக் கூடாது என்ற நோக்கின் அடிப்படையில், எமது தலைவரின் எண்ணத்திலிருந்து உருவானது தான் தமிழீழ மாவீரர் நாள்.

தமிழீழ விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்து, உரமாகிப் போன மாவீரர்களின் எண்ணிக்கை பத்து, நூறு என்ற நிலை மாறி ஆயிரக்கணக்காக உயர்ந்து விட்ட நிலையில், ஒவ்வொரு மாவீரர்களையும் தனித்தனியாக ஆண்டுதோறும் அவரவர் நினைவு நாட்களில் நினைவுகூர இயலாது என்ற நிலையில், அனைவரையும் ஒரே நாளில் நினைவு கூரத்தக்கதாக தமிழீழ விடுதலைப் போரின் முதற் களச் சாவடைந்த இயக்க வீரன் லெப்டினன்ட் சங்கரின் (சத்தியநாதன்) நினைவு நாளான நவம்பர் 27 ஆம் நாளைப் பொதுவான நாளாகத் தேர்ந்தெடுத்து, எமது தலைவர் 1989 ஆம் ஆண்டில் தமிழீழ மாவீரர் நாளை அறிவித்தார்.

விடுதலைப் போராட்டத்தில் உலகம் வியக்கும் வகையிலே புதிய வரலாறு படைத்து, புதுமை சேர்த்து நிற்கும் எமது தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் மண்மீட்புப் போரிலே பல வெற்றிகளைக் குவித்து வரும் அதேநேரம், நாட்டை எல்லாத் துறைகளிலும் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களைத் தீட்டி, வழிகாட்டி இயங்கி வருவதோடு, தூய்மையான தேசிய விடுதலைப் போரை வீறோடு நடத்தி, வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களைப் போற்றி நினைவில் நிறுத்தவும், அவர்களது பெற்றோரும், குடும்பத்தினரும் அல்லலுறும் நிலையை மாற்றவுமெனப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தி வருகின்றார்.

- தமிழீழ மாவீரர் பணிமனை.




- பொன்.தியாகம்.

இந்த மாவீரர்கள் யார்? இவர்கள் எப்படிப்பட்டவர்கள், இவர்கள் ஏன் மாவீரரானார்கள், இவர்கள் மாவீரராகிய கோலங்கள், குறிகள் எப்படியானவை, இவர்களை இழக்கின்ற போது இவர்களது பெற்றோர், சகோதரங்கள், மனைவி, கணவன், பிள்ளைகளின் தாற்பரியம் எப்படியானது, இவையாவற்றையும் விரிவாக, விளக்கமாக எழுதப்போனால், பெரிய நீண்ட தொடராகிவிடும். தவிர்த்து எனது சிறிய அனுபவத்துக்குத் தக்க வகையில் சுருக்கமாகத் தர விளைகிறேன்.

இலங்கைப் பேரினவாத அரசினாலும், அரச படைகளாலும் தமிழீழ மண் பறிக்கப்பட்டு, மக்கள் அழிக்கப்பட்டுத் துரத்தப்பட்டு, அல்லோலகல்லோலப்பட்ட வேளையில் எமது தேசியத்தலைவர் வே.பிரபாகரனால் ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், போராளியாக இணைந்த எமது போராட்டத்துக்கு எதிரான அனைத்து எதிரிகளுடன் போராடித் தங்களை அர்ப்பணித்துத் தற்கொடையாக வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போராளிகளையே தமிழீழ மக்கள் மாவீரர்கள் என்ற நாமத்துடன் ஏற்றிப், போற்றிப் பூசித்துவருகின்றனர்.

இவர்கள் குடும்பத்தை அதிகமாக நேசித்து, இந்நேசம், பாசம், யாவும் விரிவடைந்து தமிழீழ மக்களையும், மண்ணையும் நேசித்த காரணத்தால் போராட்டத்தில் இணைந்தார்கள். அந்தக் கணத்தில், தன்னையும், தன் உடல், உதிரம், ஆத்மா தன் வளமான வாழ்வு அத்தனையையும் அர்ப்பணிப்போம் என்று உறுதி எடுத்துப் போராடியவர்கள்.

இவர்கள் போராடி மாவீரராகும் பொழுது, தங்கள் இலட்சியத்தை மக்கள் ஏற்றுப் போராடித் தமிழீழத்தை மீட்பார்கள் என்ற நம்பிக்கையில் மாவீரராகுவதற்குத் தயங்குவதில்லை. தாங்கள் போராட்டத்தின் அத்திவாரங்கள், வேர்கள், விழுதுகள் என்ற நம்பிக்கையால் மாவீரராவார்கள், எமது உயிரிலும் மேலானது சுதந்திரம் எமது மக்கள் கௌரவம், சுபீட்சமான வாழ்வு என்ற தலைவரின் இலட்சிய வேட்கையைக் கைக்கொண்டு மாவீரரானார்கள்.

மாவீரர்கள் என்னும் பொழுது அனைத்து வீரச்சாவடைந்தவர்களையும் பொதுமையாகக் குறிப்பிட்டு நோக்கினாலும், எமது போராளிகளுடைய வீரச்சாவுக் கோலங்கள் மாறுபட்டவையாகவும், வேறுபட்டவையாகவும், வித்தியாசமாகவும் அமைவதை வரலாறுகள் மூலமாகவும், சம்பவங்கள் மூலமாகவும் அறியக் கூடியதாகவுள்ளது.

போராளிகள் எதிரியை எதிர்த்து, முகாம்களைத் தகர்க்க, இடங்களைப் பிடிக்கப் படையணிகளாகச் சென்று வீரச்சாவடைகிறார்கள், விழுப்புண்ணடைந்து பின் வீரச்சாவடைகிறார்கள், முகாம்களை, கப்பல்களை, டோறாக்களை, பாரிய எதிரிப் படையணிகளைத் தங்கள் உடல்களில் குண்டேந்தி, தாக்கித் தகர்த்துத் தங்களையே சிதறடித்துத் தற்கொடையாளர்களாகின்றனர். இவர்களைக் கரும்புலிகள் என்கின்றோம். இவை தரையிலும், கடலிலும் நடக்கின்றன. இவர்களில் முகம் தெரியாத, விலாசமில்லாத கரும்புலி மாவீரர்களும் இல்லாமலில்லை. அனைத்துத் தியாகங்களிலும் இது உயர்வாக மக்களால் மதித்துப் போற்றப்படுகிறது. இவர்களுடைய வித்துடல் கிடைக்காத காரணத்தால், நினைவுக்கல் நாட்டப்பட்டு, வீட்டுக்குத் திருவுருவப்படங்கள் கொடுக்கப்படுகிறது.

எதிரியின் சுற்றிவளைப்பு, தற்செயலான அகப்பாடுகள் மூலம் எதிரியிடம் பிடிபடாமல், தம்மைத் தாமே எரித்து தங்களைத் தாங்களே அழித்துக் கொள்வதும் ஒருவகை வீரச்சாவாகும். இதற்கு முக்கிய உதாரணமாக, வங்கக் கடலில் காவியமான கேணல் கிட்டுவையும், தோழர்களையும் கூறலாம். சயனைட் கடித்தும் தம்மை அழித்துள்ளனர்.

அகிம்சை முறையில் வீரச்சாவு, இது அகில உலகமும் அறிந்த ஒரு அதியுயர் தியாகச்சாவு, எமது தமிழீழத்தில் தியாகி லெப்.கேணல் திலீபன், இதை வரலாற்றில் பதித்தான். இவனின் பாதச்சுவட்டை அடியொற்றி தியாகச்சுடர் அன்னை பூபதியம்மா தன்னை அர்ப்பணித்து நாட்டுப்பற்றாளரானார்.

இன்னும் விபத்துச் சாவுகளும், சுகயீனச் சாவுகளுமாக பல கோலங்களில் வீரச்சாவுகள் நடைபெற்று வருகின்றன. இவர்கள் இழப்புக்களை உறவுகள் எப்படியும் தாங்கிக் கொள்வது மிகவும் கடினமே. ஆரம்ப காலத்தில் பெற்றோரும். சகோதரர்களும் மட்டுமே இழப்புக்களை சந்தித்தனர். இன்றைய காலகட்டத்தில் கணவனை, மனைவியை, தாயைப் பிள்ளைகளும் இழக்கும் வகையில் போராட்டம் விரிவடைந்து வருகிறது.

இவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட மாவீரர்களை இழக்கும் குடும்பங்களையும், ஒரே நேரத்தில் இரு மாவீரர்களை இழக்கும் குடும்பங்களையும் கூடச் சந்திக்கின்றோம். இவர்களுடைய துன்ப துயரங்கள், கவலைகள் வேறுபட்டவையாகவும், இறுதி நிகழ்வு நேரங்களில் அணுகுமுறைகள் மாறுபட்டவையாகவும் காணப்படும். இவையாவையும் எமது போராளிகள் சமாளித்து அரவணைத்து, ஆறுதல் கூறிக் கௌரவமாகவும், புனிதமாகவும். எமது போராளிகள் நிறைவேற்றி வருகின்றார்கள்.

இந்த மாவீரர்களுக்குப் பிரதேசவாரியாக ஆவணங்கள் போன்று புனிதமாகத் துயிலுமில்லங்கள் அமைக்கப்பட்டு, மாவீரர் பெற்றோரின் விருப்பத்துக்கமைவாக வித்துடல் விதைக்கப்பட்டும், நடுகற்கள் நாட்டப்பட்டும் வருகிறது.

இந்த மாவீரர்களில் விசேட நிலைகளைக் கருத்திற்கொண்டு, அவர்களுடைய முதன்மையான வீரச்சாவுகளை, அதே தினங்களில் புனிதமாக நினைவு கூர்ந்து வருகிறார்கள். இவற்றில் சில தேசிய தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாகக் கூறப்படும் கேணல் கிட்டுவும், தோழர்களும் நினைவு நாள் அன்னை பூபதியம்மா நினைவு நாள், கரும்புலிகள் நினைவுநாள், தியாகி திலீபன் நினைவுநாள், பன்னிருவர் நினைவு நாள், 2 ஆம் லெப்.மாலதி நினைவுநாள், மாவீரர்நாள் என்பன பிரதானமானவையாகும்.

அனைத்து மாவீரர்களையும், தமிழீழ மக்கள் நினைவுகூரவும், மாவீரர் பெற்றோரைக் கௌரவிப்பதற்காகவும், முதல் மாவீரர் லெப். சங்கர் வீரச்சாவடைந்த நவம்பர் 27ஆம் திகதியை 1989இல் மாவீரர் நாளாக எமது தேசியத்தலைவரால் பிரகடனப்படுத்தப்பட்டு, ஆண்டுதோறும் மாவீரர் நாள் நடைபெற்று வருகிறது.

இந்த நாட்களில் தமிழீழம் புனிதமாக விழாக்கோலம் பூண்டு காணப்படும். நவம்பர் 27 ஆம் திகதி மாலை 6.05 மணிக்கு அனைத்து மாவீரர் பெற்றோர்களும் தங்கள் தங்கள் துயிலுமில்லங்களுக்குச் சென்று, தங்கள் மாவீரர் செல்வங்களின் விதைகுழிகளுக்கும், கல்லறைகளுக்கும் சென்று சுடரேற்றுவார்கள். இதற்கு முன்பாக எமது தேசியத் தலைவர் நாட்டு மக்களுக்காற்றும் உரை இடம்பெறும். பின் அமைப்பின் கௌரவிப்பைப் பெற்றுப் பெற்றோர் விடைபெறுவர்.

தமிழீழ மக்கள் இந்தக் காலகட்டத்தில் மாவீரர்களைக் காவல்தெய்வங்களாகவும், மீட்பர்களாகவும் நினைத்து- ஏற்றிப் போற்றி, சுடரேற்றி மாலையிட்டு, மலர்தூவி, வீரவணக்கம் செலுத்தி வருகிறார்கள்.

# சோமாலியாவின் ஸ்திரநிலைக்கு ஐ.நா.படையை அனுப்பக் கோரிக்கை



சோமாலியாவில் ஸ்திரத்தன்மையை நிலைநாட்ட ஐ.நா. பாதுகாப்புச்சபை தனது படைகளை சோமாலியாவிற்கு அனுப்ப வேண்டுமென சோமாலியாவின் புதிய ஜனாதிபதி அப்துல்லா யூசுப் ஐ.நா.பாதுகாப்புச் சபையைக் கேட்டுள்ளார்.

அண்மையில் சோமாலியாவின் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அப்துல்லா யூசுப்பை ஐ.நா. இதுவரை அங்கீகரிக்கவில்லை. ஆனாலும் கென்யத் தலைநகரில் தற்போது இடம்பெற்றுவரும் பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் இவர் உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சோமாலியாவிற்கு படைகளை அனுப்புவது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையின் உறுப்புநாடுகள் சில கவலை தெரிவித்துள்ளன. சோமாலியாவிற்கு படைகளை அனுப்புவதற்கு முதல் அங்கு ஸ்திரத் தன்மை ஏற்படுத்தப்பட வேண்டுமென ஐ.நாவுக்கான பிரிட்டன் தூதுவர் எமிர் ஜோன்ஸ் பரி தெரிவித்தார். அத்துடன் முரண்பட்டுக் கொண்டிருக்காமல். இது தொடர்பாக இணைந்து செயலாற்ற வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

சோமாலிய தலைநகரில் பல ஆயுதக் குழுக்களின் வன்செயல்கள் தொடர்ந்தும் உள்ளதனால் யூசுப் தலைமையிலான அரசாங்கத்தை அமைக்கமுடியாத நிலை காணப்படுகின்றது.

ஆனால் இந்த ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களை தாம் களைவதாக சில குழுக்கள் தெரிவித்த போதிலும் அந்த நடவடிக்கை இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

சோமாலியாவில் தமது திட்டங்களை கட்டாயப்படுத்தி நடைமுறைப்படுத்தப் போவதில்லையென ஜனாதிபதி யூசுப் தெரிவித்துள்ளார். அத்துடன் புதிய அரசாங்கத்தின் கீழ் பயிற்றப்பட்ட படை இல்லை பொலிஸ் நிர்வாகம் இல்லை. மற்றும் வேறு பாதுகாப்பு நடைமுறைகளும் இல்லை.

எனவே சோமாலியாவில் ஸ்திரத்தன்மையை நிலை நாட்டத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதற்காகவே படையினரை சோமாலியாவிற்கு அனுப்புமாறு நாம் கேட்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் வெளிநாட்டுப்படையினர் சோமாலியாவில் நிலைநிறுத்தப்படுவதனை சோமாலியாவின் இஸ்லாமியக் குழுக்களும் வேறு சில அமைப்புக்களும் கடுமையாக எதிர்த்துள்ளன.

இதனிடையே கென்ய தலைநகர் நைரோபியில் வசித்து வரும் சோமாலிய அதிபரின் வாசஸ்தலம் மீது கடந்த புதன்கிழமை இனந்தெரியாத ஆயுதபாணிகள் தாக்குதலை மேற்கொண்டபோதும் அவர் எவ்வித காயமும் அடையவில்லையென செய்திகள் தெரிவித்தன.

## 'மிக்கிமவுஸ்' 76வது பிறந்தநாள் விழா



கார்ட்டூன் படங்களிலும், டிஸ்னி லேண்ட் கேளிக்கை பூங்காக்களிலும் வரும் 'மிக்கி மவுஸ்' பொம்மைகளை ஜப்பானிலுள்ள ஒரு பொம்மை தயாரிப்பு நிறுவனம் வித்தியாசமான முறையில் தயாரித்திருக்கிறது.

மிக்கி மவுசின் 76-வது பிறந்தநாள் விழாவையொட்டி இந்த ரோபாட் மிக்கி மவுஸ் உருவாக்கப்பட்டுள்ளது. 2.75 கிலோ எடை உள்ள இந்த மிக்கி மவுஸ் விலை 440 அமெரிக்க டொலர். இன்னும் 2 நாளில் இது ஜப்பானில் விற்பனைக்கு வர இருக்கிறது.

# உத்தர பிரதேசத்தில் 13 படையினர் பலி!

இந்தியாவின் பீகார், உத்தரப்பிரதேசம், ஆந்திரா உட்பட பல்வேறு மாநிலங்களில் நக்சலைட் தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

உத்தரப்பிரதேசத்தில் நக்சலைட் தீவிரவாதிகளுக்கெதிரான நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இராணுவத்தின் ஒரு பிரிவான பிராந்திய ஆயுதப்படையினர், அங்குள்ள சாந்துவாலி மாவட்டத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

பஸ் ஒன்றில் இராணுவத்தினர் சென்றுகொண்டிருந்தபோது முன்னால் இரண்டு ஜீப்புகளும் சென்றுகொண்டிருந்தன. அவ்வேளை பாலமொன்றை முன்னால் சென்ற ஜீப்புகள் கடந்து சென்றன.

பின்னால் வந்த பஸ் அந்தப் பாலத்தின் மீது சென்றதும் பாலத்தின் அடியில் வைக்கப்பட்டிருந்த குண்டொன்று பயங்கரமாக வெடித்தது. இதில் சிக்கி இராணுவத்தினர் பயணம்செய்த பஸ் சிதறியதுடன் அதில் பயணம் செய்த 13 இராணுவத்தினர் உடல் சிதறிப் பலியாகினர். 4 பேர் படுகாயமடைந்தனர். இந்தக் குண்டுத் தாக்குதலை நடத்திய நக்சலைட்டுக்கள் அந்த பஸ்ஸிலிருந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு தப்பியோடிவிட்டனர்.




# புதைக்கப்பட்ட பலஸ்தீன சிறுமியின் உடலை தோண்டியெடுக்க இஸ்ரேல் கோரிக்கை

இஸ்ரேல் படை அதிகாரி ஒருவரால் கடந்தமாதம் எகிப்தின் எல்லையோரமாக உள்ள காஸாப் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட 13 வயது பலஸ்தீன சிறுமியின் புதைக்கப்பட்ட உடலை தோண்டியெடுக்குமாறு இஸ்ரேல் இராணுவம் கேட்டுள்ளது.

இமாம் அலி ஹமாஸ் என்ற இந்தச்சிறுமி பாதையோரமாகச் சென்றுகொண்டிருந்த வேளை இஸ்ரேல் படைஅதிகாரி இவரை சுட்டுக்கொன்றார். இந்தச் சிறுமி உயிரிழந்த பின்னரும், இராணுவ அதிகாரியை அவரது சகாக்கள் தடுத்த போதும் உயிரிழந்த உடல் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார்.

இந்தச் சம்பவத்தையடுத்து குறித்த இராணுவ அதிகாரிமீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. எனவே இவர் மீதான குற்றச்சாட்டு தொடர்பாக ஆராயும் வகையில் குறித்த சிறுமியின் உடல் பரிசோதனை செய்யப்பட வேண்டுமெனவும். இந்தச் சிறுமியின் உடல் தோண்டியெடுக்கப்பட வேண்டுமெனவும் இஸ்ரேல் இராணுவ சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.



குறித்த சிறுமி வீதியோரமாக குண்டுகளை புதைத்துக்கொண்டிருக்கையிலேயே சுடப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்திருந்தது. ஆனால் அதனை மறுத்த சிறுமியின் குடும்பத்தவர்கள் சிறுமி பாடசாலைக்குச் சென்றுகொண்டிருக்கும்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்திற்குப் பின்னர் குறித்த இராணுவ அதிகாரி கைது செய்யப்பட்ட போதிலும் அவரது பெயரை இஸ்ரேல் வெளியிடவில்லை.

# ஈராக் தேர்தலை முன்னிட்டு மேலதிக படை அனுப்பப்படும்

## அமெரிக்கப் படை அதிகாரி தெரிவிப்பு




எதிர்வரும் ஜனவரி மாதம் ஈராக்கில் இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலை முன்னிட்டு மேலதிக அமெரிக்கப்படைகள் ஈராக்கிற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக அமெரிக்கப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பலூஜா நகரைக் கைப்பற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் மிகவும் வெற்றிகரமாக அமைந்ததாகத் தெரிவித்துள்ள அமெரிக்க மத்திய படையின் தளபதி ஜெனரல் சிமித் ஆங்காங்கே தீவிரவாதிகளுக்கும், படையினருக்கும் இடையே சிறுசிறு மோதல்கள் இடம்பெற்றுவருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் எதிர்வரும் ஜனவரி மாதம் இடம்பெறவுள்ள தேர்தலை முன்னிட்டு மேலதிக படைகளை அனுப்ப வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ள ஜெனரல் சிமித் சுமார் 3000 முதல் 5000 வரையான படைகள் ஈராக்கிற்கு அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு படைகள் ஈராக்கிற்கு அனுப்பப்படுவது தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக அல்ல என்றும், தேர்தலை எவ்வித பிரச்சினைகளும் இன்றி அமைதியான முறையில் நடாத்தி முடிப்பதற்காகவே எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் தீவிரவாதிகள் தேர்தல் காலங்களில் ஆங்காங்கே தாக்குதல்களை நடாத்தக் கூடும் எனத் தெரிவித்துள்ள - ஈராக்கில் உள்ள அமெரிக்க கடற்படையின் உயர் அதிகாரியான ஜெனரல் சற்ரெலர் தேர்தலைக் குழப்பும் வகையில் தீவிர வாதிகளால் பாரிய தாக்குதல்களை நடாத்த முடியாது என்றும், பலூஜா நகரில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை அடுத்து தீவிரவாதிகள் பலமிழந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதே சமயம் நேற்று பாக்தாத்தின் வடபகுதியில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றின் மீது ஈராக்கிய தீவிரவாதிகள் றொக்கட் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

## ஆங் சாங் சூகிக்கு அடுத்த நிலையிலுள்ள

# எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் பர்மிய சிறையிலிருந்து விடுதலை




பர்மிய இராணுவ அரசாங்கம் விடுதலை செய்யவுள்ள நான்காயிரம் சிறைக் கைதிகளில் பர்மிய எதிர்க்கட்சித் தலைவி ஆங் சாங் சூகிக்கு அடுத்த நிலையிலுள்ள ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர் மின்கோ நைங் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர் 1988 ஆம் ஆண்டு ஜனநாயகம் கோரி ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்களுடன் இணைந்து செயற்பட்டபோதும், அந்த ஆர்ப்பாட்டம் இராணுவத்தினரால் நசுக்கப்பட்டது. இந்த நிலையில் 1989 ஆம் ஆண்டு 26 ஆவது வயதில் மின்கோ கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இதன் பின்னர் தற்போது 42 ஆவது வயதிலேயே இவர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஒரு கனவுலகத்திலிருந்து வெளியே வருவதுபோல் உள்ளதென, விடுதலைக்குப் பின்னர் மின்கோ, ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

பர்மாவின் முன்னாள் பிரதமரான கின் நியூன்ரினால் அமைக்கப்பட்டிருந்த தேசிய புலனாய்வுத் தலைமையகம் கடந்த மாதம் கலைக்கப்பட்ட பின்னரேயே இந்த 4000 கைதிகளும் விடுதலை செய்யப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கைதிகள் விடுதலையை வரவேற்றுள்ள ஐ.நா. செயலாளர் கொபி அனான் அரசியல் காரணங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள மற்றைய கைதிகளும் விடுதலை செய்யப்படவேண்டுமெனக் கோரியுள்ளார்.

இதேவேளை 74 வயதுடைய வின்ரின் என்ற எழுத்தாளரும் விடுதலை செய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றபோதிலும் அது உறுதிப்படுத்தப்படவில்லை. 4000 கைதிகள் விடுதலையின் தொடர்ச்சியில் இதுவரை 30 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 4000 கைதிகளைவிட மேலும் 1300 கைதிகள் பர்மிய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அரபாத்தின் மருத்துவ அறிக்கையை மனைவி சுஹா பெற்றுக் கொண்டார்




பலஸ்தீன ஜனாதிபதி யாசிர் அரபாத்தின் மருத்துவ அறிக்கை, அவரது மனைவியான சுஹாவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக சுஹாவின் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

யாசிர் அரபாத் சிகிச்சை பெற்ற பாரிஸ் பேசி இராணுவ வைத்தியசாலையில் இருந்து நேற்று முன்தினம் இந்த மருத்துவ அறிக்கையை சுஹா பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரபாத்தின் இந்த மருத்துவ அறிக்கையை பொதுமக்களுக்கு வெளியிடுவதா இல்லையா என்பது தொடர்பாக சுஹா ஆராய்ந்து வருவதாக அவரது சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

பலஸ்தீன அதிபர் அரபாத் இஸ்ரேலிய முகவர்களால் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டதென்ற வதந்தி உட்பட பல்வேறு வதந்திகள் நிலவி வரும் நிலையில் சுஹா இந்த மருத்துவ அறிக்கையை பொதுமக்களுக்கு வெளியிடுவதன் மூலம் இவற்றுக்கெல்லாம் ஒரு முடிவு கட்டப்படுமென பலஸ்தீன அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அதிபர் அரபாத்தின் முழுமையான மருத்துவ அறிக்கை பலஸ்தீன மக்களுக்கு ஒரு வரலாற்று ஆவணமாக வைக்கப்படுமென பலஸ்தீன அமைச்சரவைப் பேச்சாளரான ஹசன் அடி லிப்டே தெரிவித்தார்.

நாம் அதிபர் அரபாத்தின் முழுமையான மருத்துவ அறிக்கையைப் பெற்றதும் தேவையான நடவடிக்கைகளை எடுத்து பலஸ்தீன மக்களுக்கு அது தொடர்பான முழுமையான தகவலை வெளியிடுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# வல்வெட்டித்துறை துப்பாக்கிச் சூடு:

# பொய்யான குற்றச்சாட்டை ஈ.பி.டி.பி. சுமத்துகின்றது!

## யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த இரு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின்போது காயமடைந்த பொன்னுத்துரை தெய்வேந்திரம் என்பவரைப் பயன்படுத்தி, வழமைபோல் ஈ.பி.டி.பியினர் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டை சுமத்தியுள்ளதாக யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்றுமாலை யாழ்.மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் -

வல்வெட்டித்துறை - ஊரிக்காட்டுப் பகுதியில் அப்பாவி இளைஞர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவமானது ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாத செயலாகும்.

தொடர்ச்சியான பழிவாங்கல்களாலும் ஏமாற்றங்களாலும் பாதிப்படைந்துள்ள பொதுமக்கள் மத்தியில் இத்தகைய சம்பவமானது கொதிப்படைய வைத்து எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தூண்டியுள்ளது.

தீர்வுகள் கிடைக்காத நிலையில் பாதிப்படைந்துள்ள மக்கள் தமது நியாயத்துக்காக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது இயல்பான ஒன்றாகும்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டியவர்கள், மக்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது அவர்களது உணர்வுகளை துப்பாக்கி முனையிலும் குண்டாந்தடியடிப் பிரயோகத்தின் மூலமும் அடக்கியாள முற்பட்டமை - எமது மக்களைக் கொதிப்படையச் செய்துள்ளது. கொதிப்படைந்த நிலையில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மக்கள் மீது மீசாலைப் பகுதியில் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தமையானது மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது.

நிராயுதபாணிகளான அப்பாவிப் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்ட இந்தச் சம்பவமானது, வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும். இவ்வாறு மக்களின் உணர்வுகளை மதிக்காது அவர்கள் மீது துபபாக்கிப்பிரயோகம் செய்வதால் அவர்களது போராட்டங்களை ஒருபோதும் கட்டுப்படுத்திவிட முடியாது என்பது வரலாறு அறிந்த உண்மை.

இத்தருணத்தில் நாங்கள் எமது மக்களது உணர்வுகளை மதிக்கின்றோம். அதேநேரத்தில் எமது மக்களிடம் கோரிக்கையொன்றினையும் முன்வைக்கின்றோம். எமது புனித தினமான மாவீரர் நாளை உணர்ச்சியுடன் அனுஷ்டிப்பதை குழப்புவதற்காக எதிரி துரோகிகளுடன் இணைநது திட்டமிட்டுச் செயற்படுகின்றான். எனவே எமது மக்கள் எதிரியின் இந்த எண்ணத்துக்குத் துணைபோகாது எமது மண்ணுக்காக தமது இன்னுயிரை ஈர்த்த மாவீரர்களின் நினைவுநாளை உணர்வுரீதியாக அனுஷ்டிப்பதற்காக அமைதிகாக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

எதிரியின் திட்டமிட்ட சதிக்கு ஒருபோதும் மக்கள் துணைபோய் விடக்கூடாது. எதிரிகள் எம்மீது திட்டமிட்டே குற்றஞ்சாட்டியுள்ளனர். குறிப்பிட்ட சம்பவத்தில் காயமடைந்த பொன்னுத்துரை தெய்வேந்திரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளையில் - தான் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டதாகவே தெரிவித்தார். வைத்தியசாலைக் குறிப்பேட்டில் இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்ததாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவதினம் இரவு ஊடகவியலாளர்கள் எவரும் காயமடைந்தவரைச் சந்திக்க படைத்தரப்பினர் அனுமதிக்கவில்லை. பின்னர் தமது கருத்துக்களை அவரிடம் திணித்த நிலையிலேயே இன்று ஊடகவியலாளருக்கு கருத்து வழங்க அவரை அனுமதித்துள்ளனர். இதிலிருந்து எதிரிகளும் துரோகிகளும் இணைந்து திட்டமிட்டு எம்மீது சேறு பூச முனைகின்றனர். எமது மக்கள் உண்மைநிலையை நன்கறிவர்.

அப்பாவி மக்களுக்கெதிரான இத்தகைய மோசமான நடவடிக்கைகளை நாம் ஒருபோதும் மேற்கொண்டதில்லை. அந்தவகையில் இந்தக் கொலைச் சம்பவத்துக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்பதைக் கூறிக்கொள்வதுடன் அப்பாவி மக்களுக்கெதிரான இத்தகைய சம்பவங்களை வன்மையாகக் கண்டிக்கிறோம் எனத் தெரிவித்தார்.

### ஆத்திரம்கொண்ட....

மீசாலை சந்திப் பகுதியில் பொது மக்கள் பெருமளவில் ஒன்று கூடி நேற்று மாலைவரை மறியலில் ஈடுபட்டிருந்தபோது அந்தப் பகுதியில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தாலை முன்னிட்டு ஏ-9 வீதியூடான போக்குவரத்தை பொது மக்கள் தடுத்திருந்தனர்.

வீதிப் போக்குவரத்தை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொது மக்களைப் படையினர் அடித்துவிரட்ட முற்பட்டபோது நேற்றுக்காலை 9.30 மணியளவில் பொதுமக்கள் தரப்பிலிருந்து படையினர் மீது கல்வீச்சு நடத்தப்பட்டது.

இதையடுத்து படையினர் கண்மூடித்தனமான முறையில் பொதுமக்கள் மீது தாக்குதலை நடத்தியதுடன் துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவத்தில் மீசாலை வடக்கைச் சேர்ந்த மகாலிங்கம் சுந்தரராஜா என்ற 24 வயது இளைஞன் படுகாயமடைந்தார். இவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் நேற்றுமாலை 6 மணியளவில் மீசாலை சந்திப் பகுதியில் கூடியிருந்த பொதுமக்களைக் கலைக்கும் நோக்குடன் படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதனையடுத்து அங்கு திரண்டிருந்த இருநூறுக்கும் அதிகமான பொதுமக்கள் படையினர் மீது கற்களை வீசித் தாக்கினர். தொடர்ந்து படையினரும் பதிலுக்குத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

மீசாலைச் சந்தியிலிருந்து பொது மக்களால் விரட்டப்பட்ட படையினர் புத்தூர்ச் சந்தி இராணுவ முகாமை அடைந்தபோதும் - அங்கும் பொது மக்கள் ஒன்றுகூடி காவலரண்களைத் தீயிட்டு எரித்துவிட்டு முகாம் பகுதிக்குள் நுழைந்தனர்.

ஆக்ரோஷம் கொண்டு கற்களை வீசித் தாக்கிக்கொண்டிருந்த பொது மக்களைக் கண்டதும் படையினர் முகாமை விட்டுத் தப்பியோடி - வேம்பிராய் முகாமில் தஞ்சமடைந்தனர்.

படையினர் அனைவரும் தப்பியோடிய நிலையில், புத்தூர் சந்தி இராணுவ முகாம், அங்கிருந்த தளபாடங்கள், பொருட்கள், சைக்கிள்கள் போன்றன பொது மக்களால் முற்றாகத் தீயிட்டு அழிக்கப்பட்டன.

அழிக்கப்பட்ட இந்த இராணுவ முகாமை விட்டு பின்வாங்கிய படையினர் இந்தச் செய்தி எழுதப்படும் வரை மீளத் திரும்பவில்லை எனத் தெரியவருகிறது.

இராணுவ முகாம் எரித்து அழிக்கப்பட்ட நிலையில் - தென்மராட்சி அரசியற்துறையினரால் - பொதுமக்களை அமைதி காக்கும்படி ஒலி பெருக்கி மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு அமைய நேற்று மாலை பொதுமக்கள், வீதித் தடைகளை அகற்றிய பின்னர் அங்கிருந்து சென்றனர்.

# குடாநாட்டுத் தாக்குதல்கள் நாடாளுமன்றில் எதிரொலிப்பு!

## கூட்டமைப்பு எம்.பிகள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றில் சபாநாயகரின் ஆசனத்திற்கு முன்பாக ஒன்றுகூடி - நிறுத்து நிறுத்து கொலைகளை நிறுத்து, இராணுவமே வெளியேறு போன்ற கோஷங்களை எழுப்பியதால் சபை நடவடிக்கைகள் பத்து நிமிடநேரம் ஒத்திவைக்கப்பட்டன.

யாழ்.குடாநாட்டில் வல்வெட்டித்துறையிலும், மீசாலையிலும் அப்பாவி இளைஞர்கள் சுடப்பட்ட சம்பவம் தொடர்பாக நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் விசேட உரை ஒன்றை இரா.சம்பந்தன் நிகழ்தத முற்பட்டார்.

வரவு செலவுத் திட்ட விவாதத்தில் அமைச்சர் இ.பு.ரத்னாயக்க உரை நிகழ்த்திய பின்னர், இரா. சம்பந்தன் விசேட உரையொன்றை நிகழ்த்த எழுந்து நின்றார்.

ஆனால், இடையில் குறுக்கிட்ட ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வரவன்ச, ஒரு விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, இன்னொரு விடயம் தொடர்பாக உரையாற்ற முடியாது என எதிர்ப்புத் தெரிவித்தார்.

ஆனால், இரா.சம்பந்தன் அவசர பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டும் என்று கூறவே அதற்கு ஜே.வி.பியினர் எதிர்ப்புத் தெரிவிக்கவே கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து சபைக்கு நடுவே சென்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கொல்லாதே கொல்லாதே தமிழர்களைக் கொல்லாதே, இராணுவமே வெளியேறு போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன. இதனால் சபைக்குத் தலைமை வகித்த பிரதி குழுக்களின் தலைவர் ஜயந்த கருணாதிலக சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்கள் ஒத்திவைத்தார்.

பின்னர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரின் அறைக்குச் சென்று, குடாநாட்டு நிலைவரம் குறித்த உரைநிகழ்த்துவதற்கு அனுமதி கோரினர்.

பின்னர் சபாநாயகர் தலைமையில் சபை கூடியபோது இரா.சம்பந்தன் விசேட உரைநிகழ்த்தினார். இதன்போது குடாநாட்டில் கொலைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற படுகொலையுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் கைதுசெய்யப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

### மாவீரர்....

நாள் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

குடாநாட்டின் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வுகள், பொது இடங்களில் சிரமதானப் பணிகள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

பிரதான வீதிகள், பொது இடங்கள் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டும், நினைவுப் பந்தல்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் இன்று மாவீரர் வார நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

### நேற்றைய.....

களில் காத்துநின்றுவிட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்ததுன. பொதுச் சந்தைகள், வியாபாரிகள் செல்லாமையால் இயங்கவில்லை. இதனால் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

இளைஞர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டதால் ஆக்ரோஷமடைந்த பொதுமக்கள், பிரதான வீதிகள், முக்கிய சந்திகளின் வீதிக்குக் குறுக்கே கற்கள், மின்கம்பங்கள், மரங்கள் என்பவற்றைப் போட்டு வீதித் தடைகளை ஏற்படுத்தினர். வீதிகளில் ரயர்களைப் போட்டும் எரித்தனர். இதனால் பிரதான வீதிகளூடான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டிருந்தது. இராணுவ முகாம்களுக்கு அருகிலும் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டதால் பொதுமக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டன.

வடமராட்சிப் பகுதி வீதிகளில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் காலைவரை இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். எனினும் வீதிகளில் தடைகள் போடப்பட்டு ரயாகள் எரிக்கப்பட்டதை அடுத்து இராணுவ வாகனங்கள், இராணுவத்தினரின் நடமாட்டங்கள் குறைந்திருந்ததுடன் படையினர் முகாம்களில் முடங்கினர்.

நேற்றைய ஹர்த்தாலினால் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம், தீவகம் போன்ற அனைத்துப் பிரதேசங்களிலும் இயல்புநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தன. (48,90,47,14)

### படையினர்....

கிலேயே இருந்தார். ஆனால், சம்பவ இடத்தில் இவருக்கு காயம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றும் மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்தவர்களைக் குறிவைத்தே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதென்றும் அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரிகளில் ஒருவர் சேட்டுக்கள் இருந்து துப்பாக்கியை எடுத்துச் சுட்டார்.

படையினரின் ஒத்துழைப்புடன் ஈ.பி.டி.பியினர் இந்தத் தாக்குதலை நடத்திவிட்டு பழியைப் புலிகள் மீது போட படைத்தரப்பு முனைகிறது. இதில எந்த உண்மையும் கிடையாது.

இந்தச் சம்பவத்தை வல்வை மக்கள் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதாக வல்வை மக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

### காயமுற்ற....

சாலைக்கு அழைத்துவரப்பட்டார் என்பது தெரியாது என்றும், தான் இறந்த இரு இளைஞர்களது சடலங்களைப் பரிசோதித்துக் கொண்டிருந்த வேளையில் பொலிஸார் ஒருவரே குறிப்பிட்ட நபரிடம் அழைதது்ச் சென்று காட்டியதாகவும் தெரிவித்தார்.

மேலும் தெய்வேந்திரம் தன்னை யார் வைத்தியசாலைக்கு அழைத்து வந்தார்கள் என்பதைத் தெரிவிக்க மறுத்து விட்டதாகவும் மாவட்ட வைதத்திய அதிகாரி தெரிவித்தார்.

இதேசமயம் நேற்றுப் பிற்பகல் வைத்தியசாலைக்கு வந்த படையினர் தன்னிடம் அனுமதி பெறாது வைத்தியசாலை சட்டதிட்டங்களை மீறி குறிப்பிட்ட நபருக்கு இராணுவச் சீருடை அணிவித்து அழைத்துச் சென்றதாகவும் தெரிவித்தார்.

பொன்னுத்துரை தெய்வேந்திரம் தற்பொழுது பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

நேற்றுமுன்தினம் மாலை முதல் நேற்று மாலைவரை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் நோயாளர்களும், பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

வைத்தியசாலை கட்டடத்திற்குள் ஆபத்தான ஆயுதங்கள் சகிதம் சுமார் ஐம்பது பொலிஸாரும், படையினரும் காவலில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் நோயாளர்கள் சிகிச்சை பெற்றுவந்த விடுதிகளுக்குள்ளும் ஆயுதங்களுடன் நடமாடியதாலேயே அங்கு சிகிச்சைபெற்று வந்த நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# குடாநாட்டு நிலைமை தொடர்பாக படையதிகாரிகள் - புலிகள் பேச்சு!

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைப் பகுதியில் அப்பாவி இளைஞர் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து, எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள் மீது, படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஏற்பட்ட பதற்றத்தைத் தவிர்ப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளும், படைத்தரப்பினரும் நேற்றுச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

நேற்று மாலை 4.30 மணிக்கு யாழ்.ஆயர் இல்லத்தில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையிலும், படைத்தரப்பின் சார்பில் யாழ்.மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தலைமையிலும் கலந்துகொண்டனர். அத்துடன் யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகமும் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறைப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்துக்கு தமது கண்டனத்தைத் தெரிவித்த விடுதலைப் புலிகள், இந்தச் சம்பவமானது படையினரின் முகாமுக்கு அண்மித்த கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதால் படைத்தரப்பினரே இதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் எனச் சுட்டிக் காட்டினர்.

மேலும் உடனடியாக விசாரணை செய்யப்பட்டு குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

தற்போது ஏற்பட்டுள்ள பதற்றநிலையைத் தடுக்கும் முகமாக இரு தரப்பினரும் இணைந்து செயற்படுவது என்று இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதேசமயம் - இன்று ஆரம்பமாகும் மாவீரர் வார நிகழ்வுகளை எந்த வித இடையூறும் இன்றி நடத்த ஒத்துழைப்பு வழங்குவதற்குப் படையினர் இணக்கம் தெரிவித்தனர்.

## கண்டனம்

**வல்வை சிதம்பரக் கல்லூரி மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த அப்பாவி இளைஞர்கள் இருவர் ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.**

**வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், உப அலுவலக அலுவலர்களும்**

(C-3385)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.